கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
416-282-4978
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. East, Suite #3
(Eglinton & Markham)
Scarborough, ON. M1J 2H6
Tel: 416-267-8221

நதி 25 பாலம் 11 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JUNE 01, 2015

# ஆசிரியர்களது சட்டவிரோதமான பணிமறுப்பு போராட்டம்

ஒன்ராரியோ உயர்நிலைப் பாடசாலை ஆசிரியர் கூட்டமைப்பை (OSSTF) சேர்ந்த ஆசிரியர்கள் கடந்த ஐந்து கிழமைகளாக பணிமறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.




கூட்டமைப்பு செய்யும் இந்த பணிமறுப்பு போராட்டத்தை சட்டவிரோதமானது என கூறுமாறு ஒன்ராரியோ தொழிலாளர்கள் உறவுகள் சபையிடம் (OLRB) கேட்டிருந்தன.

Durham கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த உயர்நிலைப் பாடசாலை ஆசிரியர்கள் ஏப்பிரல் 20ஆம் திகதியில் இருந்தும், Sudbury கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த உயர்நிலைப் பாடசாலை ஆசிரியர்கள் ஏப்பிரல் 27ஆம் திகதியில் இருந்தும், Peel கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த உயர்நிலைப் பாடசாலை ஆசிரியர்கள் மே 4ஆம் திகதி யில் இருந்தும் பணிமறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் கிட்டத்தட்ட 70,000 உயர்நிலைப் பாடசாலை மாணவர்கள் ஒன்ராரியோவில் பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கின்றனர்.

ஒன்ராரியோ பொதுப்பாடசாலைகள் சபைகளின் சங்கத்தை (OPSBA) சேர்ந்த Durham, Sudbury மற்றும் Peel கல்விச் சபைகள் மூன்றும் ஒன்ராரியோ உயர்நிலைப் பாடசாலை ஆசிரியர் கூட்டமைப்பு செய்யும் இந்த பணிமறுப்பு போராட்டத்தை சட்டவிரோதமானது என கூறுமாறு ஒன்ராரியோ தொழிலாளர்கள் உறவுகள் சபையிடம் (OLRB) கேட்டிருந்தன.

OLRB 2015 மே 26ஆம் திகதி செவ்வாய் கிழமை மாலை 5 மணிக்கு வெளியிட்ட 53 பக்க அறிக்கையில் இந்த மூன்று கல்வி மாவட்டத்தையும் சேர்ந்த OSSTF ஆசிரியர்கள் செய்யும் பணிமறுப்பு போராட்டம் சட்டவிரோதமானது என கூறியிருந்தது. இதனால் ஆசிரியர்கள் அடுத்த நாள் 2015 மே 27ஆம் திகதி புதன்கிழமை பாடசாலைக்கு வேலைக்கு செல்ல வேண்டியிருந்தது.

OLRB தனது அறிக்கையில் ஆசிரியர்களது பணிமறுப்பு போராட்டத்திற்கு உரிய காரணிகளில் ஒன்று ஒரு வகுப்பில் இருக்கக்கூடிய மாணவர்களது எண்ணிக்கை ஆகும். இதற்கும் பாடசாலை சபைகளுக்கும் தொடர்பு இல்லை. ஒரு வகுப்பில் இருக்கக் கூடிய மாணவர்களது எண்ணிக்கையை தீர்மானிப்பது ஒன்ராரியோ மாகாண அரசு. ஆசிரியர்கள் பாடசாலை சபைகளுக்கு எதிராக அச்சபைகளின் கட்டுப்பாட்டுக்குள் வரும் விடயங்களுக்கு மட்டுமே பணிமறுப்பு போராட்டங்கள் செய்யலாம் என தெரிவித்துள்ளது.

OLRB தலைவர் Bernard Fishbein இந்த அறிக்கையில் ஆசிரியர்களது இந்த பணி மறுப்பு போராட்டத்தை நிரந்தரமாக தடை செய்யவில்லை. அவர் OSSTFஇற்கு இரண்டு கிழமை தடையையே விதித்துள்ளார். இந்த இரண்டு கிழமைக்குள் OSSTF மீண்டும் OPSBAயுடன் பேச்சு வார்த்தைகளுக்கு போகலாம் அல்லது அவர்கள் தாங்கள் பணிமறுப்பு போராட்டத்திற்கு வைத்த காரணங்களில் பாடசாலை சபையின் கட்டுப்பாட்டுக்குள் வராத விடயங்களை நீக்கிவிட்டு மீண்டும் இரண்டு கிழமையில் பணிமறுப்பு போராட்டத்தில் இறங்கலாம் என்று கூறியிருக்கிறார்.

OSSTF தலைவர் Paul Elliot தெரிவிக்கையில் ஆசிரியர்கள் தற்போது உடனடியாக வேலைக்கு திரும்புவார்கள். ஆனால் அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அவர்கள் தமது கோரிக்கைகளை OLRB கூறியவாறு மீள்பரிசீலனை செய்து இரண்டு கிழமையின் பின்னர் மீண்டும் ஜூன் 10இல் பணி மறுப்பு போராட்டத்தை தொடங்குவார்கள் என்றார்.

OLRBயின் தீர்ப்பு, ஆசிரியர்களை மே 27இல் இருந்து பாடசாலைகளுக்கு தமது பணிகளுக்காக திரும்ப வழிவகுத்துள்ளது. இந்நிலையில் ஒன்ராரியோ மாகாண அரசின் கல்வி அமைச்சர் Liz Sandals 2015 மே 25ஆம் திகதி ஒன்ராரியோ நாடாளு மன்றத்தில் ஆசிரியர்களை வேலைக்கு

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.


LEXUS OF RICHMOND HILL
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

DENTAL OFFICE
DENTAL IMPLANT • ROOT CANAL • WISDOM TOOTH EXTRACTION
Dr. Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS (Glasg) DENTAL SURGEON
2 LOCATIONS
3150 Eglinton Ave. East, Unit 5 Markham/Eglinton | Tel: 416.264.3232
3351 Markham Road, Unit 129, Markham/Steeles | Tel: 416.609.2022

MORTGAGE ALLIANCE
The Guardian
SAVE YOUR MONEY
SAVE YOUR HOME
- 2nd Mortgage - Purchase & Refinance
- Renewal & Switch - Home Equity Loan
- Residential & Commercial Mortgage
We're Hiring Experienced & New Agents
Gini Annarasa
Cell: 416.830.3241
Franchise Of The Mortgage Alliance Network
*Independently Owned & Operated


HOMES *COMMERCIAL*INVESTMENTS
Salem/Rosland
629k
4 bm 3 warm home
Scarborough
498k
3 bm Finished bsmnt home
Taunton/thicksan
389k
3 bm 3 wsrm home in ajax
stouffville
4bm 3wm Home
HWY 48/ N. OF TORONTO
399k
50 ACRES
Beautiful 50.94 Acres In Georgina,Build Your Dream Home Ideal For Farming Crops- Great Farm Land.
scarborough
154k
2+1 bm condo
14 years of service
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
COMMISSION $500/-* GUARANTEED SALE
Century 21 BROKERAGE
PAT WILL BEAT ANY DEAL*!!
Hall of Famer
80 Corporate Dr. Suite 208
Toronto M1H3G5
416-290 1200


Allstate
You're in good hands.
Allstate Insurance Company Of Canada
Home & Auto Insurance
வீடு, வாகன காப்புறுதி
Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca


COTTAGE FOR RENT
Beautiful waterfront cottage with a capacity of 12 people.
80km away from Scarborough.
Fishing boat and pedal boat is available.
Murali - 416-569-4065
Ganesh - 416-768-8169

# இனவாத ஆயுதத்துடன் களமிறங்கியுள்ள மஹிந்த ராஜபக்ச!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவை நாட்டின் அடுத்த பிரதமராக்கி விட வேண்டும் என்பதில் இப்போது, அவரது ஆதவாளர்கள் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவரை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், மாகாண மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் என்போர் கூட்டாக இணைந்து நாளாந்தம் சந்திப்புகளை நடத்துவதோடு, ஊடகங்களுக்கான அறிக்கைகளையும், அறிவிப்புக்களையும் விடுத்தவண்ணம் உள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் கட்சிக்குள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னரே நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ள நிலையில், அச்சட்ட மூலத்தை எதிர்ப்பவர்களைச் சமாளித்து, அவர்களின் கருத்துக்களை ஏற்று, சில திருத்தங்களையும் மேற்கொண்டு, அச்சட்ட மூலம் சில நாட்களில் நிறைவேற்றப்படலாம் எனத் தெரிகின்றது. எனவே, இதன் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும். எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் புதிய நாடாளுமன்றம் அமைக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அண்மையில் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## - விகிர்தன் -

இவ்வாறு, தருணம் நெருங்கி வரும் நிலையில், மஹிந்தவைக் களமிறக்கும் திட்டங்களும் முனைப்படையத் தொடங்கி யுள்ளன. மஹிந்த ராஜபக்ஸ, தான் இத்தேர்லில் போட்டியிட விரும்புவதாக வெளிப்படையாக முன்னர் தெரிவிக்க வில்லை. எனினும், அதற்கான நகர்வுகளில் அவர் நுட்பமான முறையில் ஈடுபட்டு வந்ததை அவதானிக்க முடிந்தது.

மைத்திரி ஆட்சியேற்றதன் பின்னர், நுகேகொடையில் ஆரம்பித்து, சில கூட்டங்களை மஹிந்த ஆதரவாளர்கள் நடத்தியிருக்கின்றார்கள். இதில் கணிசமான பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர். இக்கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு மஹிந்த ராஜபக்ஸவை அவரது ஆதரவாளர்கள் அழைத்த போதும் அவர் அவற்றில் நேரடியாக கலந்து கொள்ளவில்லை. ஆனால், தனக்குரிய ஆதரவு எந்தளவில் உள்ளது என்பதை அவர் அக்கூட்டங்களினுடாக கணக்கிட்டு வந்தார். இப்போது, நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தான் போட்டியிடவுள்ளமை குறித்து, மஹிந்த ராஜபக்ஸ தனக்கு நெருக்கமானவர்களிடம் உறுதிப்படுத்தியிருக்கின்றார் எனவும், தமக்கு வெளிப்படையாக ஆதரவளிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வாராந்த கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளார் எனவும், அவர் நிழல் அமைச்சரவை ஒன்றை அமைத்து வாராந்தம் கூட்டங்களை நடத்தி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆரம்பத்தில், தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பயந்தவராகவே காணப்பட்ட மஹிந்த ராஜபக்ஸ சற்று அடக்கி வாசிக்கும் முறையிலேயே கருத்துக்களை வெளியிட்டு வந்தார். அவரைச் சந்திக்கும் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் கூட அவர் நேரடியாகப் பதிலளிப்பதில்லை. சிறுசிறு மக்கள் சந்திப்புகள் மற்றும் விகாரைகளில் அவர் கலந்து கொள்ளும் வழிபாட்டு நிகழ்வுகளின் போதே கருத்துக்களை வெளியிட்டு வந்தார். இப்போது அவர் கடுமையாக புதிய அரசாங்கத்தை குற்றம் சுமத்த ஆரம்பித்துள்ளார். தான் இல்லாததால் நாடு மோசமான நிலைக்குப் போய்விட்டது எனக் கூறுகின்றார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவர் நேரடியாக குற்றம்சாட்டாவிடினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கடுமையாகத் தாக்கத் தொடங்கிவிட்டார். மஹிந்தவின்



ஆதரவாளர்களும் ரணிலைத் திட்டித் தீர்ப்பதில் போட்டியிட ஆரம்பித்துள்ளனர். இதன் உச்சக் கட்டமாக, நாடாளுமன்றப் பண்பாட்டைக் கூட கணக்கிலெடுக்காமல் தகாத, கெட்ட வார்த்தையில் ரணிலை திட்டியிருக்கின்றார் ஒரு மூத்த இடதுசாரியான நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி, நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்கவுள்ளதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்தானந்த அலுத்கமகே கூறியிருக்கின்றார். இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில், இதுவரையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 84 பேர் கையெழுத்திட்டுள்ளனர் எனவும், எல்லாமாக 130 பேர் இதில் கைச்சாத்திடுவர் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட அமைச்சர்கள் சிலரும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார். மஹிந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகள் இப்போது வேகம் பிடித்து வருவதால் மஹிந்த ஆதரவாளர்கள் இவை எல்லாவற்றையும் பழிவாங்கல் செயல் என்றே மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இந்த மோசடிகள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் விசாரணைப் பிரிவையும் அவர்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். தங்களைப் பழிவாங்குவதற் கென்றே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அமைக்கப்பட்ட பிரிவு இதுவென அவர்கள் கூறுகின்றனர்.
பொலிஸ்மா அதிபர் தற்போது உத்தரவுகளைப் பிறப்பிப்பதில்லை, பிரதமர்தான் உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றார், எல்லாவற்றையும் தீர்மானிப்பதும் அவர்தான் என மஹிந்த ராஜபக்ஸ ரணிலை கடுமையாக குற்றம்சாட்டுகின்றார். ரணிலை இத்தேர்தலில் எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்பதில் மஹிந்தவும் அவரது ஆதரவாளர்களும் கடுமையான முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். சமீபத்தில் அம்பாறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் மிக வெளிப்படையாக தனது திட்டத்தை மஹிந்த வெளிப்படுத்தியிருக் கின்றார். நாட்டில் இப்போதுள்ள ஆட்சியில் மாற்றத்தை உருவாக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார். "பயங்கரவாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தவன் நானே. நாட்டில் சுபீட்சம் ஏற்படக் காரணமாக இருந்தவனும் நானே. எனது தலைமையில் இந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்ட நல்ல பல திட்டங்களை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன. என்னை அரசியலிலிருந்தும் மக்கள் மனத்திலிருந்தும் ஓரங்கட்டுவதற்கான முயற்சிகள் திரை மறைவில் நடைபெறுகின்றன. எனது ஆதரவாளர்கள் பழிவாங்கப்படுவதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். மக்களுக்கு பணி செய்தவர்களைப் பழிவாங்குகின்றனர். ஸ்திரமில்லாத இந்த ஆட்சி நாட்டுக்கு வேண்டுமா? அல்லது நிம்மதியான சுபீட்சமான ஆட்சி வேண்டுமா? என உங்களைப் பார்த்துக் கேட்கின்றேன்" என முழங்கியிருக்கின்றார் மஹிந்த. மஹிந்த ராஜபக்ஸவிற்கு கடந்த ஜனாதிபதி தேர்தலில் 58 லட்சம் வாக்குகள் கிடைத்தன. சுமார் நான்கு இலட்சம் வாக்குகளினாலேயே மைத்திரிபால சிறிசேன வென்று ஜனாதிபதி யானார். எனவே, மஹிந்த ராஜபக்ஸ பொதுத் தேர்தலில் போட்டியிட்டால் அவர் வெல்வது உறுதியானது என அவரது ஆதரவாளர்கள் கருதுகின்றனர். மஹிந்தவிற்கு ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த 58 இலட்சம் வாக்குகளை 70 லட்சம் வரை உயர்த்து வதற்கு தாங்கள் செயற்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.


எது எவ்வாறாயினும், மீண்டும் ஆட்சியில் அமர, மஹிந்த ராஜபக்ஸவும் அவரது ஆதரவாளர்களும் இன்று தூக்கிப்பிடித்துள்ள பிரச்சாரக் கருவிகளில் முக்கியமானதாக இனவாதம் அமைந்துள்ளமையை இங்கு குறிப்பிட வேண்டும். சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை அழுத்திக் கூறுவதன் மூலமாக அவர்களைத் திசைதிருப்பி வாக்குகளை வெல்லும் முனைப்பில் அவர்கள் ஈடுபடுகின்றனர். புங்குடுதீவு மாணவி கொலை செய்யப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சம்பவங்களை ஓர் உணர்ச்சி சார்ந்த விடயம் என சிங்களத் தலைவர்கள் சிலரே ஒத்துக்கொள்ளும் நிலையில், இவ்வாறான சம்பவங்களின் அடிப்படையில் பயங்கரவாதம் மீண்டும் உருவாகியிருப்பதாக மஹிந்த ராஜபக்ஸ கூறியிருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் நீதிமன்றத்துக்கும் பொலிஸ் நிலையத்துக்கும் கல்வீச்சு நடத்தப்பட்டு ஒரு புரட்சி ஏற்பட்டதாகவும், இந்தச் சம்பவங்கள் நன்கு திட்டமிடப்பட்டவை என்றும், விடுதலைப் புலிகளின் ஆரம்பமும் இவ்வாறே அமைந்திருந்தது எனவும் மஹிந்த ராஜபக்ஸ குறிப்பிடுகின்றார்.

நாட்டில் இன்னமும்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# அத்தனைக்கும் ஆசைப்படு



சத்குரு வாசுதேவ்

இந்த உலகில், மற்றவருடன் உங்கள் உறவு எப்படி அமைகிறது என்பது உங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சங்களில் ஒன்று. இங்கே, நீங்கள் பல்வேறு முகங்களை எதிர்கொள்ள வேண்டி யிருக்கும். ஒரு சிறிய சதுர அறையில் உங்களுடன் ஒரேயொரு சக பணியாளர் வேலை செய்தால், பிரச்சினைகளைச் சமாளிப்பது சுலபமாயிருக்கலாம். ஆனால் உங்கள் பணியில் ஆயிரம் பேரைக் கையாள வேண்டியிருந்தால், பலப்பல விநோதமான அனுபவங்களை நீங்கள் சந்திக் நேரிடும்.

நீங்கள் முக்கியமானவராக இருந்தாலும், அத்தனை பேரும் உங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தீர களேயானால், மிகப் பெரிய ஏமாற்றமே ஏற்படும். அடுத்தவர் உங்களைப் புரிந்து கொள்ளாததால் இது நேரவில்லை. அடுத்தவரை நீங்கள் புரிந்து கொள்ளாததால் இது நேர்ந்தது. சொல்லப் போனால், மிக நெருக்கமான உறவுகளிடம் கூட பல சந்தர்ப்பங்களில் ஏமாற்றங்களையே சந்தித்திருப்பீர்கள்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

ஒருமுறை, கோமாவில் பல மாதங்களாக கிடந்த கணவனை அருகிலேயே இருந்து கண்ணும் கருத்துமாக அவனது மனைவி கவனத்துக்கொண்டாள். கணவனுக்கு நினைவு திரும்பியதும், மனைவியை அருகே அழைத்தான். 'என்னுடைய மோசமான நேரங்களில் எல்லாம் நீ என் கூடவே இருந்திருக்கிறாய். எனக்கு வேலை போனபோது, உற்சாக வார்த்தைகள் சொன்னாய். நான் சொந்த பிஸினஸ் துவங்கி நஷ்டத்துக்கு மேல் நஷ்டம் வந்தபோது, இரவு பகல் பார்க்காமல் உழைத்துப் பணம் கொண்டுவந்தாய். வழக்கில் நம் வீட்டையே ஜப்தி செய்தபோது கூட மனம் தளராமல் சிறிய வீட்டுக்கு என்னுடன் குடி வந்தாய். இன்று ஆஸ்பத்திரியில் கிடக்கிறேன். இப்போதும் நீ பக்கத்திலேயே இருக்கிறாய். உன்னைப் பார்க்கும்போது எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? என்று மெல்லிய குரலில் கேட்டான்.

மனைவி சந்தோஷக் கண்ணீர் பொங்க, நெகிழ்ச்சியுடன் அவன் கைகளைப் பற்றிக்கொண்டாள்.

கணவன் சொன்னான்... 'நீ என்னோடு இருப்பதால் தான் எனக்கு எந்த நல்லதும் நடப்பதில்லையோ என்று தோன்றுகிறது'. இப்படி ஏறுக்கு மாறாகக் குதர்க்கமாகப் புரிந்து கொள்பவர்களிடம் எந்த உறவுதான் நீடித்திருக்க முடியும்?

உறவுகளை எப்படிக் கையாள வேண்டும்? நாம் எப்படிக் கையாள்கிறோம்? எவ்வளவு நெருக்கமானவர்களாக இருந்தாலும், ஒரு எல்லைக் கோட்டை வரைந்து வைத்திருக்கிறோம். இருவரில் யார் அதைத் தாண்டினாலும், அடுத்தவர் போர்க்கொடி தூக்குகிறோம். ஒருவராவது விட்டுக்கொடுத்து, பெருந்தன்மையாக நடந்தால்தான் அடுத்தவர் பிழைத்திருக்க முடியும்.

உறவினராயிருக்கலாம், உடன் பணி புரிபவராக இருக்கலாம், நண்பரா யிருக்கலாம், அடுத்த நாட்டைச் சேர்ந்தவராக இருக்கலாம்.. உலகில் பிறந்தவர் எவராக இருந்தாலும் அவர்களிடம் உங்களுக்குப் பிடித்த குணங்கள் சிலவும், பிடிக்காத குணங்கள் பலவும் கலந்துதான் இருக்கும். இரண்டு வகை குணங்களையும் சமமாக ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வந்துவிட்டால், பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விடும். அப்படியில்லாமல் தேவைப்படும்போது அடுத்தவரைக் கொஞ்சுவதும், தேவை யில்லாதபோது எடுத்தெறிவதுமாக இருக்கும் வரை ஏமாற்றங்களும் மனப் போராட்டங்களும் தொடரத்தான் செய்யும். சுற்றியிருப்பவர்கள் எல்லோரும் அற்புதமான மனிதர்கள். ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் அவர்கள் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்ளலாம். அதைப் பெரிதுபடுத்தாதீர்கள். அவர்கள் மாற வேண்டும் என்று ஏன் எதிர்பார்க்கிறீர்கள்? நீங்கள் மாறுங்கள்.

எங்கெங்கே, யார் யாரிடம், எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ, அப்படி நடந்து கொள்ளத் தயாராயிருங்கள். அடுத்தவரிடம் எது செல்லுபடியாகுமோ, அதைப் பயன்படுத்துங்கள்.

ஒரு தடவை சங்கரன்பிள்ளை திறந்திருந்த சாக்கடைக்குள் விழுந்து விட்டார். எவ்வளவு முயற்சி செய்தும் வெளியே வரமுடிய வில்லை. பெருங்குரலெடுத்து, 'தீ...தீ..' என்று கத்தினார்.

அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் பரபரப்பாகி தீயணைப்பவர்களை வரவழைத் தார்கள். அவர்கள் சங்கரன்பிள்ளையைச் சாக்கடையில் இருந்து வெளியே இழுத்துப் போட்டார்கள். தீ... தீ... என்று கத்தினீர்களே, எங்கே நெருப்பு? என்று அவரிடம் கேட்டார்கள். 'சாக்கடை... சாக்கடை.. என்று கத்தினால் நீங்கள் வருவீர்களா? அதனால் தான் தீ.. தீ... என்று குரல் கொடுத்தேன்' என்றார் சங்கரன்பிள்ளை. உங்கள் வீட்டில் இருக்கும் ஒவ்வொருவரும் உங்களைப் போலவே இருந்து விட்டால், என்ன ஆகும் யோசியுங்கள். அப்புறம் யாரை முட்டாள் என்று திட்டுவீர்கள்? யாரை புத்திசாலி என்று கொண்டாடுவீர்கள்? அரைமணி நேரத்துக்குக் கூட உங்களால் தாக்குப் பிடிக்க முடியாது.

வீட்டிலேயே இப்படி என்றால், உலகையே உங்களைப்போல மாற்றப்பார்ப்பது எப்பேர்ப் பட்ட முட்டாள்தனம்? வாழ்க்கையின் சுவாரசியமே அதன் வேறுபாடுகளில் தானே இருக்கிறது. ஒவ்வொருவரையும் உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி வளைக்கப் பார்க்காதீர்கள். மாறாக அடுத்தவரை அப்படியே ஏற்றுக்கொள்ளப் பழகுங்கள்.

அப்படிச் செய்தால், மற்றவர்கள் உங்கள் விருப்பப்படி அமையாமல் போனாலும், வாழ்க்கை உங்கள் விருப்பப்படி அமையும்.






AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @647.799.0575 / 1.800.828.0656
ABDV PEST CONTROL
The Name You Can Trust



Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.



யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இலவச ஆலோசனை வழங்கப்படும்



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.
இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796
வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை
8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033


MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
RIGHT AT HOME REALTY INC BROKERAGE
#1 Brokerage in Toronto*
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-388-3487
Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232
மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்
பவர் ஒப் சேல் பிரச்சினையா ?
நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?
லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?
ரீபைனான்ஸ் செய்ய வேணும்?
2வது, 3வது மோட்கேஜ் எடுக்க வேணும்?
பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?
எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க மாத்த வேணும்?
வீடு வாடகைக்கு விட அல்லது எடுக்க வேணும்?
வீடு வாங்க வேணும்/ வீடு விற்க வேணும் ?
மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,
"மோட்கேஜ் கிளினிக்"
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011
திங்கள்—வெள்ளி (call for an appointment)
BEST RATE GUARANTEED
வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00
MORTGAGE IN ANY SITUATION
எமது முகவரி
1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)
சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent/ Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240
And..
ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843
For All Your Real Estate Services

# கயவர்களிடமிருந்து தற்பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வதே இன்றுள்ள முதன்மையான தேவை!

## தாயகமடல்

இறுதிக்கட்டப் போரில் இசைப்பிரியா என்ற இளம்பெண் சிதைக்கப்பட்ட சம்பவத்திற்கும், புங்குடுதீவில் மாணவி வித்தியா சிதைக்கப்பட்ட சம்பவத்திற்குமிடையில் பாரிய வித்தியாசத்தை காணமுடியவில்லை. இரண்டும் ஒரே மாதிரியான சம்பவங்களே. இதில் பங்கு கொண்ட ஆட்களும் அதற்குரிய சூழலுமே வித்தியாசமானவை.

இறுதிப் போரில் பல பெண்கள் காமுகர்களால் வேட்டையாடப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். அதில் ஒரு குறியீடாகவே இசைப்பிரியாவை பார்க்கின்றோம். இசைப்பிரியா எங்கோ ஓர் இடத்தில் காமுகப் படையினரால் பிடிக்கப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட படங்களையும், காணொளிகளையும் இன்றும் இணையத்தில் காண்கின்றோம். யாரும் எவரையும் காப்பாற்ற முடியாத சந்தர்ப்பம், சூழலும் அது. ஆனால், வித்தியா சிதைக்கப்பட்ட சந்தர்ப்பம் சற்றும் எதிர்பாராத ஒன்று. கற்பனை கூட செய்து பார்த்திராத ஒன்று. ஒரே ஊரைச் சேர்ந்த, முன்னரே அறிந்த நபர்களால் வித்தியா திட்டமிட்டு கடத்தப்பட்டு - சிதைக்கப்பட்டு - படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில் கற்கும் 18 வயதான வித்தியா சிவலோகநாதன், காலையில் பாடசாலைக்கு சென்றவர் மாலை வீடு திரும்பவில்லை. பாடசாலையில் விசாரித்த போது, அன்று அவர் பாடசாலைக்கு வரவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர் அன்று காலையிலேயே கடத்தப்பட்டிருக்கின்றார் என்பது புலனாகின்றது. வித்தியா பாடசாலை செல்லும் வழியில் காத்திருந்தவர்கள் அவரை கடத்தி காட்டுப் பற்றைக்குள் இழுத்துச் சென்றுள்ளனர்.

அவ்விடத்தில் வித்தியா கடத்தப்பட்டதை யாராவது கண்டு கூச்சலிட்டிருந்தால் கூட அப்பெண்ணை காப்பாற்றியிருக்கலாம்.



**- ஆதித்தன் -**

வித்தியா வீடு திரும்பாததால், பெற்றோர் பாடசாலை மற்றும், நண்பர்கள் உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று விசாரித்து விட்டு, எந்தப் பலனும் கிட்டாத நிலையில் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் மாலையில் முறைப்பாட்டை பதிவு செய்யச் சென்றுள்ளனர். ஆனால் அங்கிருந்த பொலிஸ்காரர்கள் மாணவிக்கு காதல் உறவு இருந்திருக்கலாம் என்றும், காதலனோடு சென்றிருக்கலாம் எனவும் தெரிவித்து அவர்களை திருப்பியனுப்பி உள்ளனர்.

பொலிஸார் உடனடி நடவடிக்கையில் இறங்கியிருந்தால், வித்தியாவின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம். பொலிஸார் இச்சந்தர்ப்பத்தில் மிகவும் மோசமான மனோபாவத்துடன் நடந்து கொண்டதால் அடுத்த நாள் அவர்களால் வித்தியாவின் உடலை மட்டுமே மீட்க முடிந்தது.

பாடசாலைக்கு செல்லும் வழியில் உள்ள காட்டுப் பகுதியில் பாதணிகள் இருப்பதாக அவ்வழியால் சென்றவர்கள் தெரியப்படுத்திய பின்னரே பொலிஸாரால் தேடுதல் நடத்தப்பட்டது. காட்டினுள் வித்தியாவின் உடல், கால்கள் இரண்டும் அலரி மரத்தில் கட்டப்பட்ட நிலையில், பனையோலையால் மூடப்பட்டுக் காணப்பட்டது.

மே மாதம் 13ஆம் திகதி புதன்கிழமை காலை வித்தியா கடத்தப்பட்டார். அடுத்த நாள் 14ஆம் திகதி அவரது உடல் மீட்கப்பட்டது. எனினும், அன்று மாலையே கொலை சந்தேக நபர்கள் பொலிஸாரால் பிடிக்கப்பட்டனர்.

புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இந்திரகுமார் பூபாலசிங்கம் (39), உதயகுமார் பூபாலசிங்கம் (34), சசிகுமார் பூபாலசிங்கம் (31) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட இவர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில், புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சசீந்தன் மகாலிங்கம் (32), சந்திரகாந்தன் தில்லைநாதன் (33), நிசாந்தன் என்று அழைக்கப்படும் பரணி ரூபசிங்கம் குகநாதன் (26), கண்ணன் என்று அழைக்கப்படும் கோகுலன் ஜெயரட்ணம் (26) ஆகியோரும், புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த பிரசாந்தன் சிவதேவன் (24) என்பவரும் கைது செய்யப்பட்டனர். இந்த சந்தேக நபர்கள் ஐவரும் யாருக்கும் சந்தேகம் வராதபடி இருக்க, வித்தியாவின் சடலம் மீட்கப்பட்ட சந்தர்ப்பத்திலும், வித்தியாவின் இறுதிக் கிரியைகளிலும் கலந்து கொண்டிருக்கின்றனர்.

வித்தியாவின் காதணிகள் பிரசாந்தனின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இதனால், இவரே பிரதான குற்றவாளியாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவரே வித்தியாவின் கொலையைத் திட்டமிட்டு, கொழும்பில் உள்ள தனது நண்பர்களையும் அழைத்துள்ளார் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

12ஆம் திகதி இரவு கொழும்பிலிருந்து புறப்பட்டு அடுத்த நாள் அதிகாலையில் யாழ்ப்பாணம் வந்தடைந்த இவர்கள், அங்கிருந்து புங்குடுதீவிற்கு வந்து, வித்தியா பாடசாலைக்கு செல்லும் வழியில் காத்திருந்து வித்தியாவை கடத்திச் சென்று இக்கொடுமையைப் புரிந்துள்ளனர். இப்போது, சுவிஸ் குமார் என்றழைக்கப்படுகின்ற நபருடன் சேர்த்து, எல்லாமாக 9பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

எல்லாம் நடந்து முடிந்து விட்டது. வித்தியாவின் இந்த படுகொலைக்கு எதிராக வடக்கு கிழக்கு பகுதிகளில் மட்டுமல்லாமல், தென்னிலங்கையிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இன்னொருபுறம், இந்த சம்பவம் இப்போது அரசியலாக்கப்பட்டும் வருகின்றது.

வித்தியாவின் தந்தை சிவலோகநாதன் பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டு வாய் பேச முடியாமல், கைகால் அசைக்கக்கூட முடியாமல் உள்ளவர். தயார் சரஸ்வதியின் பிரான்ஸில் உள்ள ஒரு சகோதரியின் உதவியிலேயே இவர்களின் வாழ்க்கை ஓடுகிறது. இவர்களது சொந்த வீடு யுத்தத்தில் பாதிக்கப்பட்டதால் தற்போது உறவினர் ஒருவரின் வீட்டிலேயே இவர்கள் வாழ்கின்றனர். வறுமை நிலையில் வாழ்ந்தாலும் எல்லாத் துன்பங்களையும் மறந்துவிடக் கூடிய அந்தப் பிரகாசமான முகத்தையுடைய வித்தியாவின் இழப்பை பெற்றோருக்கு எந்த வகையில் தாங்கிக் கொள்ள முடியும்? என்ன ஆறுதல் கூறினாலும், இந்த இழப்பை யாராலும் ஈடு செய்ய முடியுமா?

குற்றவாளிகள் தப்பிக்க முடியாத வகையில் அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. அதே வேளையில், இளைய சமூகத்தினருக்கு இவ்வாறான மோசமான வக்கிர மனநிலை வளர்வதற்கு என்ன காரணம் என்பதையும் உளவியல் ரீதியாக ஆராய வேண்டும்.

ஒரே மண்ணில் வாழ்பவர்கள் - அயலவர்கள், ஏன் இப்படியொரு படுபாதகத்தைப் புரிந்தார்கள்? போரின் பின்னால் இப்படியானதொரு குரூரம் இவ்வாறானவர்களின் மனங்களில் குடிகொள்ள என்ன காரணம் என்பதெல்லாம் ஆராயப்பட வேண்டியவையே.

அத்துடன், இன்றுள்ள இந்த சூழ்நிலையில், எம்மை பாதுகாத்துக் கொள்ள நாமே வழிவகைகளைத் தேடிக்கொள்ள வேண்டும். பெண் பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர் இன்று அதிக கவனமெடுக்க வேண்டும். போரின் பின்னால், மக்கள் மீள் குடியமர்த்தப்பட்ட பல கிராமங்களில் உள்ள மக்கள் புங்குடுதீவைப் போன்ற சூழலிலேயே வாழ்கின்றனர். மக்களின் அடர்த்தியற்ற வாழ்விடங்களாகவே பல பகுதிகள் காணப்படுகின்றன. பாதுகாப்பற்ற, காடுகளையன்றிய பாதைகள் வழியாகவே பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இவ்வாறான பிரதேசங்களில் பாலியல் குற்றச்சம்பவங்கள் பல நடைபெற்றுமிருக்கின்றன. இப்பகுதிகளில் காணப்படும் படையினராலேயே இச்சம்வங்கள் முன்னர் நடைபெற்றுள்ளன. சில சம்பவங்கள் வெளிவந்துள்ள நிலையில், பல சம்பவங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டார்களா? அந்த வழக்குகளுக்கு என்னவானது என்பது குறித்தும் எவருக்கும் தெரியாது.

எனவே, எமது பாதுகாப்பு குறித்து நாமே விழிப்பாக இருக்க வேண்டியுள்ளது. பாடசாலைக்கு செல்லும்போது மாணவர்கள் தனியாக செல்வதை தவிர்த்து கூட்டமாக செல்வதற்கு பெற்றோரும், பாடசாலை நிர்வாகமும் மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். வித்தியா ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து பாடசாலைக்கு சென்றிருந்தால் அன்று நடைபெற்ற கொடுமையிலிருந்து அவரை காப்பாற்றியிருக்க முடியும். பெற்றோர்கள் இதில் அதிக கவனமெடுக்க வேண்டும்.

போரின் பின்னரான காலப் பகுதியில், தமிழ் பிரதேசங்களில் கூடுதலான இளைஞர்கள் மது உள்ளிட்ட ஏனைய போதைப்பொருள் பாவனைகளில் ஈடுபடுகின்றமையினை அவதானிக்க முடிகின்றது. நவீன கைத்தொலைபேசிகளில் வீதியோரங் களில் நின்று பாலியல் படங்களை பார்ப்பதையும் காணமுடிகின்றது. இப்பழக்கங் கள் எல்லாம் முன்னர் இருந்ததில்லை. இவை இளவயதினரான இவர்களுக்கு ஒருவித வக்கிர உணர்வை ஏற்படுத்தி வருகின்றது. இவ்வாறானவர்களை திருத்து வதற்கான வழிமுறைகளை காண்பதும் சமூக அக்கறை மிக்கவர்களின் கடமையாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, கயமைக் குணம் கொண்டவர்களிடமிருந்து எம்மை நாமே தற்காத்துக் கொள்வதென்பதே இப்போது உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடாகும்.

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# ஆடம்பர அடுக்குமாடி மனை விற்பனையில் முன்னணி வகிக்கும் ரொறொன்ரோ

ரொறொன்ரோவில் அடுக்குமாடி மனை விற்பனையிலும் விலையிலும் இவ்வளவு பெரிய மாற்றம் ஏற்படுமா என 20 வருடங்களிற்கு முன்பு யாராவது நினைத்துக் கூடப் பார்த்திருக்கமாட்டார்கள். அந்தக் காலகட்டத்தில் அடுக்குமாடி கட்டிடங்களின் உயரம் 20 அடுக்கு என்ற நிலையில் காணப்பட்டது. அடுக்குமாடி மனையின் உயரங்கள் 30, 50 என அதிகரித்து இப்பொழுது 80 என்ற நிலை உருவாகியுள்ளது. உயரங்கள் அதிகரிக்க, கட்டிட நிர்மாணம், மிகவும் சிக்கலாக மாறி வரும். அதற்கேற்ப வாகனத்தரிப்பு இடங்களும் நிலத்திற்கு கீழாக மேலும் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் செயற்பாடும் ஏற்படுகின்றது. முக்கியமாக Foundation இன் நிர்மாணம் மிகவும் முக்கியமாக கவனிக்கப்படுகின்றது.

ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் காணிகளின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அடுக்குமாடி மனைகளின் உயரத்தை அதிகரிப்பதே ஒரு வழிமுறையாகக் காணப்படுகின்றது. இதற்கான புதிய உதாரணம் Yonge & Bloorஇல் 80 அடுக்குமாடி மனைக்கட்டிடம். இந்த தொகுதி 2020 இல் கட்டி முடிக்க இருப்பதாக அதன் நிர்மாணக்கட்டிட உயர் அதிகாரியின் கூற்றை ஆதாரமாக வைத்து எதிர்பார்க்கப்படுகின்றது.



கடந்த சில ஆண்டுகளாக ரொறொன்ரோவில் ஆடம்பர (Luxury Condo.) அடுக்குமாடி மனைகளின் வியாபாரம் எதிர்பாராதளவிற்கு அதிகரிப்பதனைக் காணலாம். 2014இல் 37% அதிகரிப்பு முந்திய வருடத்துடன் ஒப்பிடும் போது ஏற்பட்டுள்ளது. இதுவே அடுக்குமாடி மனையில் ஒரு வருட அதிகூடிய அதிகரிப்பாக காணப்படுகிறது.

அனேகமான பிரசித்தி பெற்ற நகரங்களில் (Los Angeles, New York, Sydney, Miami) ஒரு மில்லியன் டொலரிற்கு மேற்பட்ட அடுக்கு மாடி மனைகள் விற்பனை செய்வதற்கு எடுக்கும் காலத்தை விட ரொறொன்ரோவில் குறைவாகவே எடுப்பதாக Christie's International தெரிவித்துள்ளது. Christies's International இன் அறிக்கையின் படி ஆடம்பர அடுக்கு மாடி மனைகளையே மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள்.

முக்கியமாக வயதானவர்கள், மற்றும் ரொறொன்ரோவில் வாழ விரும்பும் இளையோர் ஏற்கனவே பலகாலமாக தாம் இருந்த வீட்டை விற்றுவிட்டு அடுக்குமாடி மனைக்கு குடிபெயர்வதையே விரும்புகிறார்கள். Baby Boomers என அழைக்கப்படும் வயதானவர்கள் இந்த வயதெல்லைக்கு உட்பட்ட இவர்கள் இப்பொழுது இவ்வளவு நிலைப்பாட்டை ஏற்படுத்துகிறார்கள். இவர்களின் முக்கிய நோக்கம் தேவையான சகல வசதிகளை இலகுவாகப் பெறக்கூடிய இடம், மற்றும் தாம் பிரயாணம் செய்யும்போது தமது இருப்பிடம் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

## நாமும் நமது இல்லமும்

### ராஜா மகேந்திரன்

### தொடர் - 441

இதற்காகவே சிறந்த நிலையிலும், தரமான இடத்திலும் அமைந்திருக்கும் அடுக்குமாடி மனைகளையே தெரிவு செய்கிறார்கள். இதுவும் அடுக்குமாடி மனைகளின் விலை அதிகரிப்புக்கு காரணமாகலாம். ஒன்ராறியோவில் 1.3 மில்லியன் மக்கள் அடுக்குமாடி மனைகளில் வாழ்கின்றார்கள். ஏறக்குறைய 700,000 அடுக்குமாடி மனைகளில் வாழ்கின்றனர். 10,000 அடுக்குமாடி மற்றும் உயரம் குறைந்த கட்டிடத் தொகுதிகளில் இந்த எண்ணிக்கையான மனைகள் இருக்கின்றன.


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



*Raja Mahendran,* P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

* INDEPENDENTLY OWNED AND OPERATED

**INDUSTRIAL BUSINESS FOR SALE**

Over 40,000sq.ft building.
Lad Size 2.4 Acre. Out side storage. Plenty of parking. Owner lease back possible.
**MEADOWVALE / LAWRENCE/ SCARBOROUGH Asking Price $3.4 Million.**

**LAND FOR SALE**

1 Acre land , No Building. You Build your own business place. (No Houses)
**MEADOWVALE / LAWRENCE/ SCARBOROUGH**
**Asking price @799,000**

**NEW CONDO. FOR SALE**

**LESLIE & HWY 401**
Starting From $280K
2 Years Rental Gurantee

• 80 Rooms Branded Hotel Property, about 2.5 Hrs from GTA Room Revenue approx. 1.35 Millions and asking only 3.79 M Great Deal !

• 60 Rooms Branded Great looking property in 1.5 Hrs North west of GTA.Room Revenue approx. 1.0 Million and asking just 3.45 M.

• Great plaza in Scarborough with good mix of Tenants. Gross Income about 35K and Net Income about 24 K per month. Good Cap Rate !

**HOUSE FOR SALE**

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
Detached house for sale. 3 Level back split. 2 Washroom. Close to TTC accessibility.
**Asking Price $499,900**

**CONDO FOR SALE**

**SHEPPARD & HWY 401**
3 Bedroom condo. for sale. 2 Washroom. Completely. renovated. New Appliances.
**Asking Price $260,000**

**CONDO. FOR SALE**

**LAKESHORE & PARK (ETOBICOKE)**
1 Bedroom /2 levels condo for slae. 2 Washrooms. 4 Years new condo building. 5 Appliances.
**Asking price $349,900**

**CONDO. FOR SALE**

**MCCOWAN & FINCH**
2 Bedroom condo. for sale. Swimming pool, 24hrs. ...., underground parking.
**Asking price $279,900**

# ஆசிரியர்களது...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

திரும்பவைக்கும் சட்டமூலத்தை தாக்கல் செய்தார். ஆளும் லிபரல் கட்சிக்கு பெரும் பான்மை ஆசனங்கள் இருந்தும் எதிர்கட்சி




களான பழமைவாதக் கட்சி மற்றும் புதிய ஜனநாயகக் கட்சிகளின் ஆதரவு இல்லாததால் இந்த சட்டமூலத்தை உடனடி யாக 2015 மே 25ஆம் திகதியே வாசிப்புக் களை நடத்தி அமல்படுத்த முடியவில்லை. இதனால் நாடாளுமன்றத்தில் விவாதங்கள் நடத்தியே தனது பெரும்பான்மையை உபயோகித்து சட்டமூலத்தை அமல்படுத்த வேண்டியிருக்கும். ஒன்ராரியோ அரசு நாடாளுமன்றத்தில் விவாதங்களை நடத்தி ஆசிரியர்களை வேலைக்கு திரும்பவைக்கும் சட்டமூலத்தை மே 28இல் அமல்படுத்தியது. இந்த சட்டமூலம் ஒன்ராரியோ நாடாளு மன்றத்தில் அமல்படுத்தப்பட்டதால் OSSTF இனால் ஜுன் 10இல் மீண்டும் பணிமறுப்பு போராட்டத்தில் ஈடுபட முடியாது. இது இந்த கல்வியாண்டை மேலதிக பணிமறுப்பு போராட்டங்கள் எதுவும் இன்றி முடியவைக்கும்.

ஆனாலும் இந்த சட்டமூலம் 2015 செப்ரெம்பரில் ஆரம்பமாகும் புதிய கல்வியாண்டில் ஆசிரியர்கள் பணிமறுப்பு போராட்டத்தில் ஈடுபடுவதை தடுக்காது. ஒன்ராரியோ முதல்வர் Kathleen Wynne இந்தக் கோடை கால விடுமுறையில் அரசாங்கம் ஆசிரியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துவிடும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களுக்கும் ஒன்ராரியோ மாகாண அரசுக்கும் இடையேயான பிரச்சினைகள் சுமுகமாக தீர்த்துவைக்கப்படாவிட்டால் எதிர்வரும் 2015 செப்ரெம்பரில் ஆரம்பமாகும் புதிய கல்வியாண்டின் போது ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பொதுப் பாடசாலைகளின் ஆசிரியர்களுடன் சேர்ந்து கத்தோலிக்க மற்றும் பிரஞ்சுப் பாடசாலைகளின் ஆசிரியர்களுமாக எல்லோருமே பணிமறுப்பு போராட்டத்தில் ஈடுபடலாம் என ஒன்ராரியோ ஆங்கில கத்தோலிக்க பாடசாலைகளது ஆசிரியர் சங்கத் தலைவர் James Ryan தெரிவித்தார்.

இவ்வாறு ஒரு ஆசிரியர்களது பணி மறுப்பு போராட்டம் புதிய கல்வி ஆண்டில் நடைபெறுமானால் அது ஒன்ராரியோவில் உள்ள 2 மில்லியன் மாணவர் களையும் பாதிக்கும் என குளோப் அன்ட் மெயில் செய்தி வெளியிட்டுள்ளது. ஆசிரியர்களுக்கும் ஒன்ராரியோ அரசாங்கத்திற்குமான தொழில்சார் ஒப்பந்தம் கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் முடிவடைந்து விட்டது. புது உடன்படிக்கை எதுவும் இதுவரை கையெழுத்து இடப்பட வில்லை. அதற்கான பேச்சுவார்த்தைகளே தற்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

# இனவாத...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

அணையாமல் எரிந்து கொண்டிருக்கும் இனவாதத்திற்கு எண்ணெய் வார்ப்பதாகவே அவரது கருத்துக்கள் அமைகின்றன. இக்கருத்துக்களை தமிழ் அரசி யல்வாதிகள் மட்டுமல்லாமல் சிங்கள அரசியல் வாதிகளும் கடுமையாகக் கண்டிக்கின்றனர். "நாட்டின் எந்த பகுதியிலும் இன்று பறக்காத புலிக்கொடிகள் மஹிந்த ராஜபக்ஸவின் கண்களுக்கு மாத்திரம் தெரிகிறது. இவ்வாறு சிங்கள மக்கள் மத்தியில், தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டிவிட்டு ஆட்சியைப் பிடிக்கலாம் என்று மஹிந்த கனவு காண்கிறார்" என மனோ கணேசன் கூறியிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

நாட்டில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் - தீர்வு காண்பதற்கு கடினமான பிரச்சினைகள் என எவ்வளவோ இருக்கின்றன. ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக ஜனநாயக சூழல் ஒன்று நாட்டில் ஏற்பட வேண்டும் என்பதே கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வாக்களித்த மக்களின் எண்ணமாக இருந்தது. எதிர்வரும் தேர்தலிலும் இதற்கே முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.


உடல்நல பராமரிப்பு உங்களை சுற்றிலும் உள்ளது.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் ontario.ca/healthcareoptions என்ற இணையதளத்திற்கு சென்று விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். வோக்-இன் கிளினிக்கில் இருந்து விழுவதை தடுத்தல் தொடர்பான அனைத்தையும், Health Care Options என்ற இணையத்தளம் மூலமாக உங்கள் ஆரோக்கியத்திற்கு தேவையான அனைத்து வழிகளையும் காட்டுகிறது.

உங்கள் அருகாமையிலுள்ள உடல்நல பராமரிப்பு கிளையை கண்டறிவதற்கு:

- ontario.ca/healthcareoptions க்கு விஜயம் செய்யுங்கள்.
- நீங்கள் என்னத்தை தேடுகிறீர்கள் என்பதை டைப் செய்யுங்கள்
- உங்கள் இருப்பிடத்தை டைப் செய்யுங்கள்
- வழிமுறைகளை பின்பற்றுங்கள்




ontario.ca/healthcareoptions

Ontario

இது ஒரு ஒன்ராரியோ மாகாண அரச விளம்பரம்




3+1 Bedrooms, 2 W Room
Very Convenient Location Close To Scarborough Town Centre




4 Bedrooms, 3 W Room
Close To Durham College, University Of Ontario Institute Of Technology




2+2 Bedrooms, 3 W Room
Hardwood Floors, Granite Counter Tops,




3+1 Bedrooms, 2 W Room
Separate Entrance To A Basement Apartment




4+2 Bedrooms, 3 W Room
A Partially Fin. Basement W/ 2 Entrances & 2 Bedrooms




3+1 Bedrooms, 4 W Room
Finished Basement With Bedroom Wash Room Kitchen, & Li Room




4 Bedrooms, 3 W Room
Bus Stop Literally At The Door Step.Close To Every Thing




3 Bedrooms, 3 W Room
Oak Staircase. Pot Lights In Greatroom




4 Bedrooms, 3 W Room
Over $50,000 Spent On Upgrades




4 Bedrooms, 3 W Room
Granite Counter Tops In Kitchen Washrooms. Ss Appliances.




3 Bedrooms, 3 W Room
Walk Out To Fully Fenced Backyard W/Fruit Trees




4 Bedrooms, 4 W Room
Very Large Fully Fenced Backyard Close To School




4 Bedrooms, 3 W Room
Chef's Kit W/Porcelain Flrs, Backsplash, Granite Counters & Under Cab Lighting




4 Bedrooms, 3 W Room
Very Bright Home With Lots Of Windows





4+2 Bedrooms, 5 W Room
Stunning Home W/Bsmnt Apartment, New Roof




4 Bedrooms, 3 W Room
Absolutely Spotless & Beautiful Detached Home.
Open Concept Kitchen

KZG 647-200-5833



Sell your home **faster** and more **money**

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

RE/MAX Platinum Club Award

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent





# அஜீரணக் கோளாறு நீங்க

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

'அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு' என்ற பழமொழி அனைவரும் அறிந்த ஒன்றாகும். இது அஜீரணத்திற்கு பொருந்தும். அஜீரணம் ஏற்பட முக்கிய காரணம் மிதமிஞ்சிய உணவுதான். இன்றைய நவீன உணவு முறை மாறுபாட்டாலும், அவசரமாக உணவு உண்பதாலும் அஜீரணக் கோளாறுகள் உருவாகின்றன.

நாம் சாப்பிட்ட உணவுகள் முறைப்படி ஜீரணிக்க வேண்டும். மனித உணவுக்கு என்று ஒரு கட்டுப்பாட்டு விதிகள் உள்ளது. அந்த விதியை மாற்றும் மனிதர்கள் அவஸ்தைக்கு ஆளாகின்றனர். நாம் ஒரு நாளைக்கு எத்தனை விதமான உணவு வகைகளைச் சாப்பிடுகின்றோம் என்று பார்த்தால் நமக்கே வியப்பாக இருக்கும். வெப்பம், குளிர்ச்சி, கரடுமுரடு, இனிப்பு, காரம் என பலவிதமான உணவு வகை களைச் சாப்பிடுகிறோம். இவ்வாறு நாம் சாப்பிட்ட உணவு அதனதன் விதிகளுக்கு உட்பட்டு ஜீரணிக்க வேண்டும். அதாவது சகலவிதமான உணவு வகைகளை ஏற்பது இரைப்பையாகும். இங்குதான் உணவு அதனதன் செரிமானத் தகுதிக்கு ஏற்றபடி சிறு குடலுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. ஆனால், அங்கு அவ்வாறான செயல் சரிவர நடைபெறாத நிலையில்தான் அஜீரணம் ஏற்படுகின்றது. இதனைத் தொடர்ந்து பசியின்மை, வயிற்றில் வாயுவின் சீற்றம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, வயிற்று எரிச்சல், அடிக்கடி ஏப்பம், மலச்சிக்கல், மூலநோய் போன்ற கோளாறுகளை தினமும் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

ஜீரண சக்தி நன்றாகச் செயல்படும்போது உணவு எளிதில் சமிபாடடைவதால், உடலில் அனைத்து பாகங்களுக்கும் சத்து கிடைத்து, உடல் உறுப்புகள் சரிவர இயங்க முடிகின்றது. அப்போது உடலின் பலம், ஆரோக்கியம், புத்துணர்வு, சுறுசுறுப்பு, ஞாபகசக்தி போன்றவை அதிகரிக்கும். தோல்




பளபளப்பு அடையும். நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். சரும நோய்கள் ஏற்படாது.

பெரும்பாலான மூட்டுவலி, முதுகுவலி ஆகியன அஜீரணக் கோளாறுகளால் ஏற்படுகின்றன. ஆனால், விபத்துகளால் ஏற்படும் மூட்டுவலி, முதுகுவலி, கை கால் வலிகள் என்பன வேறுவிதமாக இருக்கும். பொதுவாக அஜீரணக் கோளாறுகளினால் கல்லீரல் மிகவும் பலவீனம் அடைகின்றது. ஏனெனில் இந்நேரங்களில் கல்லீரல் சிரமப்பட்டு அதன் பணியைச் செய்கிறது. ஆகவே கல்லீரல் பாதிப்பால் அஜீரணம் ஏற்படுகிறது. அஜீரணத்தால் கல்லீரல் பாதிப்படைகிறது.

அஜீரணம் ஏற்படாமல் இருக்க

(1) காலையில் சாதாரண உணவு, மதியம் அளவான உணவு, இரவு மிதமான சூட்டில் கூடிய பங்கு திரவ உணவு எனச் சாப்பிட வேண்டும்.
(2) இரவில் காரமான உணவுகளைச் சாப்பிடக்கூடாது.
(3) உடலுக்கு ஒவ்வாத அல்லது ஒன்றுக் கொன்று முரண்பட்ட உணவுகளைச் சாப்பிடக்கூடாது.
(4) மலம், சிறுநீர் ஆகியவற்றின் வேகத்தை அடக்கக்கூடாது.
(5) போதியளவு நீர் அருந்துவதுடன், போதைப் பொருட்களைத் தவிர்க்கவும் வேண்டும்.
(6) இரவில் தூங்காது கண் விழிப்பது. அத்துடன் கணினி மற்றும் தொலைக்காட்சி ஆகியன முன் வெகு நேரமாக அமர்ந்திருக்கக்கூடாது.
(7) எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை அடிக்கடி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.
(8) அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது அல்லது உணவை அறவே தவிர்ப்பது கூடாது.
(9) இரவு சாப்பிட்டவுடன் தூங்கச்செல்லக்கூடாது.
(10) பசிக்கும் போதே சாப்பிட வேண்டும்.
(11) தினமும் அரை மணி நேரமாவது நடைப்பயிற்சி அல்லது உடற்பயிற்சி செய்ய வேண்டும்.
(12) தொலைக்காட்சி பார்த்துக்கொண்டோ அல்லது படித்துக்கொண்டோ சாப்பிடக் கூடாது.
(13) அதிக கோபம், அச்சம், மன உளைச்சல், மன அழுத்தம் என்பன ஏற்பட்டாலும் அஜீரணக் கோளாறு ஏற்படும்.
(14) ஆண்களோ பெண்களோ நெடுநேரம் ஒரேயடியாக அமர்ந்து வேலை செய்யும்போது அஜீரணக் கோளாறு ஏற்பட்டு கல்லீரல் பாதிப்படையும்.

அஜீரணம் நீங்க

காலையில் இஞ்சி, மாலையில் சுக்கு, இரவில் கடுக்காய் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அதாவது, காலை உணவில் இஞ்சி சேர்த்தால் அது காலையில் ஏற்படும் பித்தத்தைச் சீராக்கும். மாலையில் ஏற்படும் சளியைச் சுக்கு சீர்செய்யும். இரவில் கடுக்காய் மலச்சிக்கலை நீக்கி உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது.

அஜீரணம், வாயுத்தொல்லை, மலச்சிக்கல் போன்றவற்றை நீக்கினால் உடலில் எந்தவித நோயும் வருவதற்கு வாய்ப்பில்லை.

அஜீரணத்தைத் தவிர்த்து ஆரோக்கியமாக வாழ்வோம்.

# விளம்பரம் 25ஆவது ஆண்டு போட்டிகளின் முடிவுகள

### கவிதை

1ஆம் பரிசு - 300 பருத்தி வீரர்களும் ஒரு தலைவரும் - கே. இந்திரஜித் - திருப்பூர், தமிழ்நாடு
2ஆம் பரிசு - ஒற்றை முலை - சில்வியாமேரி - சென்னை, தமிழ் நாடு
3ஆம் பரிசு - துயர்நிழல் - வேலாயுதம் கெங்காதரன் - கோலாலம்பூர், மலேசியா

### கட்டுரை


1ஆம் பரிசு - கட்டுரை - கலையும் பண்பாடும் - ஆர். லட்சுமணன், சென்னை, தமிழ்நாடு
2ஆம் பரிசு - கட்டுரை - மருத்துவமும் தமிழரும் - அறந்தை வ.முத்துவேல், அறந்தாங்கி, தமிழ் நாடு
3ஆம் பரிசு - கட்டுரை - கலையும் பண்பாடும் - த.வெ.மணிமாறன் - சென்னை, தமிழ் நாடு

### குறுநாவல்

1ஆம் பரிசு - வானவில் - நிலானி சுதன் - கெஸ்விக், கனடா
2ஆம் பரிசு - உன்னை விட்டு விலகுவதில்லை - எஸ்.செல்வசுந்தரி திருச்சி, தமிழ் நாடு
3ஆம் பரிசு - கனடாவில் ஒரு யாழ்ப்பாணம் - சோ.ராமேஸ்வரன் - மார்க்கம், கனடா

### திரைக்கதை

1ஆம் பரிசு - அதிதி - எஸ்.ராஜகுமாரன் - சென்னை, தமிழ் நாடு
2ஆம் பரிசு - கனடா பிள்ளைகள் - சோ.ராமேஸ்வரன் - மார்க்கம், கனடா
3ஆம் பரிசு - வேண்டும் தமிழ், ராசமணி சிவலிங்கம் - ரொறொன்ரோ, கனடா


கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# உலகக்கிராமம்



சித்திரைக்கும் வைகாசிக்கும்
இடைப்பட்ட முன்கோடை முன்னிரவின்
இதயம் வருடும் இதமான சூழல் ஒன்றில்
ஓர் ஏக்கர் நிலம் விசாலம்கொண்டுள்ள
எமது தாய்வளவு வெளி எங்கும்
அரைத்த வெண்ணிற உப்புக்குவியல்
பரப்பப்பட்டுப் பளபளப்பதுபோன்ற
முற்றத்துப் பஞ்சுமெத்தை மண்பரப்பில்
தலையணையைப் போட்டுத் தலைவைத்து
வானத்தை நோக்கிச் சுவைத்தபடி படுத்திருந்தேன்.

கருநீலக் கம்பளத்தில் நெருக்கமாக
வைரக்கற்கள் பதித்த விண்மீன்கள்
மின்மினிப் பூச்சிகளாகக் கண்சிமிட்டிக்
குறுங்கதைகள் சிலவற்றைக் கூறி நின்றன.

கிழக்கிலிருந்து கிளம்பிவரும் முழுநிலவு
தனது கைக்கடிகாரத்தை உற்றுப்பார்த்துத்
தான் நடந்துவந்த நேரம் பத்துமணி என்பதைப்
புன்னகை முகத்துடன் கையசைத்துச் சொல்லியது.

பால்நிலவுக் குளிர்மனதில் தன்னைச்சூழ்ந்து
வட்டமாய்ச் சப்பாணிகோலி அமர்ந்திருந்த
ஈன்ற செல்வங்களுக்குக்
கவளச்சோறு கைகளில் பரிமாறிய
எங்கள் அன்பு அம்மாவும் உறங்கச் சென்றுவிட்டார்.

கைவிளக்கும் அணைந்துவிட்டது.

காட்டுப்பற்றைகள் சூழ்ந்த குக்கிராமத்தின்
தெற்குப் பக்கமாக வயிறு குளிர்ந்து
மனம் நிறைந்த நரிக்கூட்டம் இன்னிசை பாடுகின்றன.
இரவுப்பறவைகள் சங்கீதம் இசைக்கின்றன.

மேற்குப்புற வளவுக்குரிய தலைவன்
தோட்டம் இறைத்து வீடு திரும்பிவிட்டதை
அறிவிக்கும் அவரது வளர்ப்பு நாய்களின்
குரைத்தல் சிணுங்கல் பாசமிகு பேச்சொலிகள்.

பனங்கள்ளை ருசித்து வயிற்றுக்குள் நிரப்பியவர்
சங்கீத வித்துவானாக உருமாறி அரிச்சந்திரன்
மயானகாண்ட வரலாற்றை உரத்துப் பாடியவாறு
ஊர்த்தெருவைத் தனது உரிமையாக்கிச் செல்கின்றார்.

மேற்குப் பாக்கிஸ்தானில் இருந்து கிழக்கு வங்காளம்
பிரிவதற்கான கடும்போர் நடைபெறும் காலமது.

வட இலங்கை வான்பரப்பின் மேலாக
பாக்கிஸ்தான் ஜெட்விமானங்கள் போயும்
வந்தும் கொண்டிருப்பதைத் தெரிவிக்கும்
தெளிந்த வான்பரப்பின் நீலப்பலகையில்
பாம்பு நெளிவதுபோன்று வெண்கட்டியால் கீறிய
இரட்டைக் கோடுகளின் அறிவியல் முன்னேற்றம்.

அன்று அக்காட்சிகள் என்சிந்தனையில்
அதிசயம் ஆச்சரியம்
புதினம் வியப்பு தொழில்நுட்பத் தேடுதல்.

இன்று ஜெட்விமானம் என்னைக் காவிவந்து
வடதுருவத்துக்கு அண்மையில்
வாழவைத்திருப்பது மானிடவியலின்
அதிதிறமோ..! எப்படி என்று விபரிப்பது'?

- கந்தசாமி முத்துராஜா -


உங்களுடைய நண்பர்
ஒரு பெண்ணைப் பார்த்து
தகாத வார்த்தைகளால்
கேலி செய்கிறார்.

அவ்வாறு செய்வதை நிறுத்துமாறு
நீங்கள் அவரை கேட்டுக்கொள்ளலாம்,
அல்லது அது நல்லதல்ல என அவரிடம்
கூறலாம். ஆனால், நீங்கள் அந்தப்
பெண்ணுக்கு உதவவில்லை எனில்,
நீங்கள் உங்களுடைய சக ஊழியருக்கு
உதவுகிறீர்கள்.

#WhoWillYouHelp



ontario.ca/whowillyouhelp

ஒன்டாரியோ அரசால் வெளியிடப்படுகின்றது

Ontario

# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP



# FREE

## Math Review

## G10 & G11

*"A strong math knowledge for an individual will determine their bright future."*

An opportunity to improve your marks by a different technique of teaching (more than 27yrs. Experience.)

**Starts:**

First Batch on **May 23rd** (if your math Ave. lower than 65%)

General Review on June 6th .

**Need to be registered no later than May 17th to entre the free math review.**

**INFO: 416-666-5515**

# நாம் சுயாதீன எண்ணமுள்ளவர்களா?

மிருகங்களைப் போலன்றி மனிதர்கள் சுயாதீன எண்ணமுள்ளவர்கள், தாம் விரும்பியதைத் தெரிவு செய்யக்கூடியவர்கள் என்று கூறப்படுகின்றது. இது உண்மையா? (Do we have free will?) உதாரணமாக, ஒரு நாய் ஒரு கம்பளத்தைக் கடித்துக் குதறி விட்டது என்று வைத்துக்கொள்வோம். நாய் சுயாதீன எண்ணம் அற்றது, அதன் இயல்பு அதுதான் என்று கருதி அதனை மன்னித்து விடுவோம். ஆனால் கம்பளமொன்றினை மனிதன் ஒருவன் வெட்டிச் சிதைத்து விட்டானாயின், ஏன் அவன் அப்படிச் செய்தான்? கம்பளத்தை வீணாகச் சிதைக்காமல் இருந்திருக்கலாமே, ஏதோவகையில் இவனைத் தண்டிக்கத்தான் வேண்டும் என்று எண்ணுவோம். இது மனிதன் சுயாதீன எண்ணமுள்ளவன் சரியானதை தெரிவு செய்யும் சுதந்திரம் அவனுக்கு உண்டு எனும் அடிப்படை எடுகோள்களினை ஆதாரமாகக் கொண்டது.

மனிதன் சுயாதீன எண்ணமுள்ளவன் எனும் எடுகோளை விஞ்ஞானம் ஏற்றுக்கொள்கிறதா? முதலில் இது குறித்து எமது சமயங்கள் என்ன கூறுகின்றன எனப்பார்ப்போம்.


கடவுள் மனிதனை சுயாதீன எண்ணம் உள்ளவனாகப் படைத்தான் எனக் கிறிஸ்தவமதம் கருதுகிறது. ஆதிமனிதர் ஆதாம் ஏவாள் இருவரும் சுயாதீன எண்ணம் உள்ளவர்களாகப் படைக்கப்பட்டதனாலேயே அவர்கள் இறைவனின் கட்டளையை மீறியதற்காக அவர்களும் அவர்களுடைய சந்ததியினரும் தண்டிக்கப்பட்டார்கள் என பைபிள் கூறும். சுயாதீனமான மனிதன், கிறிஸ்தவமதத்தைத் தேர்ந்தெடுத்து அதன்வழியே ஒழுகுவானாயின் சொர்க்கத்திற்கும் அவ்வாறு செய்யாதுவிடின், நரகத்திற்கும் செல்வான் என்பது கிறிஸ்தவமத நம்பிக்கை. இஸ்லாம், யூத மதங்களும் மேலே கூறிய கருத்துக்களுக்கு ஒத்த கருத்துக்களையே கூறுகின்றன.

**- ப. தயாநிதி -**

இந்திய சமயங்களான இந்து, பௌத்த, சமண சமயங்களும், நாம் சுயேச்சையானவர்கள், எனவே நல்ல கர்மங்களைத் தெரிந்தெடுத்துச் செய்வோமாயின் நல்வாழ்வினை இப்பிறப்பிலேயோ அல்லது அடுத்த பிறப்பிலேயோ பெற்று, பின்னர் இறுதியில் முத்தி அல்லது பரிநிர்வாணமடையலாம் என்று கூறுகின்றன. அதேசமயம் 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' எனும் சிவபுராணத்தில் உள்ள சொற்தொடர், இந்து சமய பக்தி மார்க்கத்தில் நாம் சுயாதீனமற்றவர்கள் என்பதை சுட்டி நிற்கின்றதாகவே கொள்ளவேண்டும்.

அடுத்து, உலகியல் வழக்கினை நோக்குவோம். எமது உறவினர் அல்லது நண்பர்கள் பிழையான வழியைத் தேர்ந்தெடுத்து, அதனால் துன்பப்படும்பொழுது 'அது அவனுடைய விதி, அவ் விதியானது அவனை பிழையான வழியில் சிந்திக்க வைத்துவிட்டது' என்று கூறுகிறோம். அதாவது அவன் சுயாதீனமற்றவன் என்று கருதுகிறோம். எனினும் 'விதியை மதியால் வெல்லலாம்' என்னும் தமிழ் பழமொழி நாம் சுயாதீனமானவர்கள் என்பதை சுட்டிக் காட்டுகிறது.

நீதித்துறை என்ன சொல்கிறது? எமது நீதித்துறையும் மனிதர்கள் சுயாதீன சிந்தனை உள்ளவர்கள் என்ற பொதுவான அடிப்படையிலேயே தண்டனை வழங்குகிறது. சிறு குழந்தைகளும் சித்த சுவாதீனமற்றவர்களும் குற்றம்புரியும்பொழுது அவர்கள் சுயாதீன சிந்தனையற்றவர்கள் என்ற அடிப்படையில் அவர்களை தண்டிப்பது இல்லை.



இனி விஞ்ஞான அடிப்படையில் இவ்விடயத்தை அணுகுவோம். எமது உடல் இரசாயனங்களால் ஆனது. எமது உடலில் உள்ள இரசாயனங்கள் முக்கியமாக இரு விடயங்களால் தீர்மானிக்கப்படுகின்றன. முதலாவது எமது தாய் தந்தையரிடமிருந்து பெற்றுக்கொண்ட மரபணுக்கள் (DNA). இதனாலேயே நாம் ஓரளவிற்கு எமது தாய் தந்தையரின் சாயலையும் அவர்களின் குணாதிசயங்களையும் கொண்டுள்ளோம். இரண்டாவது சூழல் (Environment). இச்சூழல் நேரத்திற்கு நேரம் இடத்திற்கிடம் மாறிக்கொண்டே இருக்கின்றது. எமது உடல் இரசாயனங்கள் எமது உடலில் உள்ள மரபணுக்கேற்றதாகவும், எமது மாறும் சூழலுக்கேற்றதாகவும் மாறிக்கொண்டே இருக்கின்றன. இவ் உடல் இரசாயனத்திற்கேற்ப எமது சிந்தனையும் செயலும் மாறிக்கொண்டிருக்கின்றன.

இதற்கு ஆதாரமாக பல விஷயங்களைக் கூறலாம். நாம் மதுபானம் அல்லது மனச் சோர்வுக்கான மாத்திரைகளை அருந்தும் பொழுது எமது உடலில் இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு எமது எண்ணங்கள் மாறுகின்றன. துக்ககரமான சிந்தையுள்ள மனம் இவ் இரசாயன மாற்றங்களினால் மகிழ்ச்சிகரமாக மாறுகிறது.

உடல் இரசாயன மாற்றங்களை, வேறு இரசாயனங்களால் மாத்திரம்தான் மாற்றமுடியுமென்பதில்லை. ஒளி, ஒலி போன்றவற்றினாலும் மாற்றலாம். சூரியமின்கலங்களில் ஒளிபடும்பொழுது அதிலிருந்து உருவாகும் மின்சாரம், சேமிப்புக் கலங்களில் இரசாயன மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. அதேபோல புகைப்படச்சுருளில் படும் ஒளி, இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தி புகைப்படம் எடுக்க உதவியது.

மேலும், சில சொற்களைக் கூறுவதன் மூலம் எமது கணினிகளில் மின்னோட்டத்தை ஏற்படுத்தி இயங்கச் செய்யலாம். வெவ்வேறு சொற்கள், வெவ்வேறு குரல்கள் கணினிகளை வெவ்வேறு விதமாக இயங்க வைக்கின்றன. இதே போலவே வெவ்வேறு இரசாயன நிலைகளைக்கொண்ட வெவ்வேறு மனிதர்கள், தமக்குக் கிடைக்கும் ஒலி (சங்கீதம், பேச்சு), ஒளி (அழகான காட்சிகள், புத்தகத்திலுள்ள எழுத்துகள்) போன்றவற்றை காது கண் போன்றவற்றினால் உள்வாங்கும்பொழுது எமது உடலில் உள்ள இரசாயனங்கள் மாற்றமடைந்து எமக்கு அமைதி, கோபம், கிளர்ச்சி போன்றவை ஏற்படுகின்றன. இதனால் தானா 'இந்த இருவருக்கிடையில் நல்ல 'கெமிஸ்ட்ரி' (chemistry) வேலை செய்கின்றது' போன்ற சொற்பிரயோகங்கள் ஏற்பட்டன ?

மேற்கூறியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது, எமக்குக் கிடைத்த மரபணுக்களினாலும், எமது சூழலினாலும் முற்றுமுழுதாக எமது எண்ணங்களும் செயல்களும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்பது நன்றாகவே தெரிகிறது. மனிதர்கள் சுயாதீன எண்ணமற்றவர்கள் என்பதையே விஞ்ஞானம் எமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

மனிதர்கள் சுயாதீன எண்ணமற்றவர்கள். ஆகையால், குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை கொடுக்கத் தேவையில்லையா என்னும் கேள்வி எழலாம். குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கும் சூழல், தண்டிக்காத சூழல் என்று இரண்டு சூழல்கள் இருக்குமாயின், குற்றங்களைக் குறைப்பதற்கு தண்டனை கொடுக்கும் சூழல் இருப்பது அவசியமானதே. குற்றம் புரிந்தால் தண்டனை கிடைக்கும் என்ற சூழல், எமது உடலில் உள்ள இரசாயனங்களை அதற்குத் தகுந்தபடி மாற்றி எம்மை குற்றம் செய்யாமலிருக்கத் தூண்டும்.

மனிதர்கள் சுயாதீன எண்ணமற்றவர்கள் என்று விஞ்ஞானம் கூறினும், எம்மை சுயாதீன எண்ணமுள்ளவர்கள் என்று நாம் கற்பனை செய்வதும், மற்ற மனிதர்கள் சுயாதீன எண்ணமற்றவர்கள் என்று நினைப்பதும் உலகியல் வாழ்விற்குத் தேவையாக உள்ளது. நாம் சுயாதீன எண்ணமுடையவர்கள் என்று எம்மை கற்பனை செய்துகொள்வது, நாம் சோம்பேறியாக இல்லாமல், நல்ல செயல்களைச் செய்ய உதவும். அதே சமயம் மனிதர்கள் சுயாதீன எண்ணமற்றவர்கள் என்னும் விஞ்ஞானபூர்வ உண்மையைத் தெரிந்து வைத்திருத்தல் மற்றவர்களுடன் நல்லுறவுகளைப் பேண வழிசமைக்கும். மற்றவர்கள் தவறு செய்யும் பொழுது, மரபணுக்களாலும், சூழலினாலும் முற்றுமுழுதாக அவர்கள் எண்ணங்களும் செயல்களும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்பதை நினைவுகூருவோமாயின், அவர்களின்மேல் கோபப்படாமல் அவர்களை மன்னிக்க அந்நினைவு எம்மைத் தூண்டும், மற்றவர்களில் கோபப்பட்டு நம்மை நாமே வருத்திக் கொள்வதைத் தடுக்கும், மற்றவர்களை வருத்தும் எண்ணத்தைக் கைவிடச்செய்யும், தவறு செய்தவர்களை மன்னித்து எல்லோருடனும் மகிழ்ச்சியாக இருக்க வழி சமைக்கும்.

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383



OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# வீடுகள் வாங்க விற்க......

## JUST LISTED IN AJAX














**SALEM & KINGSTON**
Bedrooms:4
Washrooms:3

People Who Are Selling & Buying House From Me, ***MY LISTING COMMISION IS FREE!!!!!!!!!***

This Offer Valied Until 30th June 2015 Only

**My listing Commision For Sellers $3500 + HST**

**GOLD CLUB WINNER 2014**




ANTONIPILLAI LOURDSON

Friendly services, Free Evolution, Free marketing, and Ect. services



FOR ONLY HOME BUYERS FREE TICKETS TO SRILANKA OR CUBA FOR MORE DETAIL CALL ME!
HONEST AND TRUST



**நாளை என்பது கனவு. இன்று என்பது நிஜம்!!!!!.**

நீங்களும் முதலீட்டாளர்கள் ஆகி மிகவும் குறுகிய காலத்தில் மிக அதிக லாபத்தை அடைய விரும்புகிறீர்களா? அழையுங்கள். என்னை. இலவச அதி சிறந்த ஆலோசனைகளுடனும் சகல ஏற்பாடுகளையும் மிகவும் நுண்ணியமாகவும். துல்லியமாகவும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.



## Lourdson Antonipillai

**Sales Representative**

**Dir: 416.738.8824**

**E-mail - lourdson29@hotmail.com**

**HomeLife / Future Realty Inc., Brokerage***

**205 - 7 Eastvale Dr. Markham. ON L3S 4N8**

**Bus:905.201.9977**

**Fax: 905.201.9229**

HOMELIFE HIGHER STANDARDS

* Independently Owned & Operated

# விமானச் சாகசக் காட்சிகள் (Air Shows)

## வான் அரங்கம் (Aerial Theatre)

வானத்தில் நடத்திக் காட்டப்படும் மற்றொரு காட்சி விமான வித்தைக் காட்சிகளானவை. இப்பாரிய காட்சிகள் முதன்முதலாக விமானப் படைத் தளங்களால் தொடங்கப்பட்டன.

இரண்டாம் உலகப் போருக்கு முன் விமானங்களை வேகமாகச் செலுத்தும் போட்டிகள் நடத்தப்பட்டன. இவை நிலத்தில் நடத்தப்படும் ஓட்டப்போட்டிகள் போன்று நேரான ஓட்டங்கள். காலப்போக்கில் மக்கள் பார்த்து இரசிக்கும் வகையில் சாகசங்கள் காட்டி விமானங்களைச் செலுத்தும் திறமைகள் வெளிக்காட்டப்பட்டன. சவால் மற்றும் ஆபத்து நிறைந்த முறைகளில் விமானங்களைச் செலுத்திக்காட்டும் (aerobatics) விளையாட்டு Air Show எனப்பட்டது. விமானங்கள் குத்திட்டு ஏறுவதும் பொத்தென்று விழுவதுபோல் இறங்குவதும் குத்துக்கரணம் அடிப்பதும் ஆகிய விமான ஓட்டிகளின் விறுவிறுப்பான வித்துவச் சாகசங்கள் பார்ப்பதற்கு மயிர்க்குத்தெறியும் காட்சிகளாகும்.

நிலத்தில் விமானங்களைக் காட்சிக்கு வைக்கும் காட்சியையும் Air show என்றே அழைக்கின்றார்கள். எனினும் வானம் என்கின்ற அரங்கத்தில் நடத்திக் காட்டும் காட்சிகள் வேறுபட்டது என்பதைக் கவனித்தல் வேண்டும்.

விமானச் சாகசக் காட்சிகள் வியாபாரத்துக்காகவும் விமானப் படைகளின் தருமப் பணிகளுக்காகவும் நடத்தப்படுவதுண்டு. சில விமானப் படைத்தளங்கள் சமூக நல்லுறவுக்காகவும் தமது பயிற்சித் தளங்களில் இவற்றை நடத்துகின்றன.

### வாண வேடிக்கைகள் (Fireworks)

வெடி மருந்துகளை வைத்து ஆபத்துக்கள் இல்லாத வெடிகளை முதன்முதலில் செய்தவர் சீனர். அதனாலேயே அவர்களது வெடிகளைச் சீனவெடிகள் என்று நாம் மிகப் பொருத்தமாக அழைக்கின்றோம்.

தொடக்கத்தில் நிலத்தில் வெடிக்கப்பட்ட வெடிகள் காலப்போக்கில் வாண விளையாட்டாக வளர்ந்தது. கி.பி. 7ஆம் நூற்றாண்டு அளவில் சீனர் வாண வேடிக்கைக் காட்சிகளை நடத்தத் தொடங்கிவிட்டனர். பலவித வடிவங்களிலும் பலவித வண்ணங்களிலும் தீப்பிழம்புகளை உமிழவல்ல வாணங்களைச் செய்யும் கலையில் சீனர் வல்லவராகினர்.

உலகத்தில் அதிக அளவில் வேடிக்கை வெடிகளைச் சீனா தயாரிக்கின்றது. அதிக அளவில் வெடிகளை ஏற்றுமதி செய்கின்ற நாடும் சீனாவேயாகும்.

இன்று வாணவேடிக்கைகளில் ஈடுபடாத நாடே இல்லையெனலாம். முருகியல் இன்பத்துக்காகவும் சமயம் மற்றும் கலாச்சாரக் கொண்டாட்டங்களுக்காகவும் வாண வேடிக்கைக் காட்சிகள் நடத்தப்படுகின்றன.



### வான்குடைக் குதிப்பு (Parachute Jump)


வான்குடைக் குதிப்பும் பார்வையாளரைக் கவரும் ஒரு நிகழ்ச்சியாகும். விமானத்திற் பயணஞ் செய்கையில் ஆபத்து நேரில் பயணிகளைக் காப்பாற்றுவதற்கே வான் குடைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

விமானத் தளங்களில் முதலில் விமானிகளுக்கு வான்குடைக் குதிப்பில் பயிற்சி அளப்பதே ஆரம்பகாலக் கொள்கையாக இருந்தது. பின்னர் குதிக்கும் அனுபவத்தைப் பெறுவதற்குப் பொதுமக்கள் சிலரும் பெற விரும்பியதைத் தொடர்ந்து குதிப்பு வியாபாரமாகியது.

1920முதல் சோவியத்து இரசியா மரத்தினால் கோபுரங்களை அமைத்து அவற்றின் உச்சியிலிருந்து விரும்பியவரை வான்குடைமூலம் குதிக்க வைத்தனர். நியுயேசியில் யூன் 2, 1935ல் முதற் தனியார் குதிப்பு நடந்தேறியது. 1939ல் நியுயோக்கில் நடந்த களியாட்டவிழாவில் பொதுமக்கள் பணம் கொடுத்து கோபுரத்திலிருந்து வான்குடைக் குதிப்பை மேற்கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டது.

கோபுரக் குதிப்பினை அடுத்து, நேரடியாக விமானத்திலிருந்தே பலர் குதிக்கத் தொடங்கினர். அனுபவம் பெறுவதற்காகவும் அறக்கொடைகளுக்காகவும் வான்குடைக் குதிப்புகள் நடத்தப்படுவதுண்டு. கனடாவில் பொறியிலாளர் திரு. குமார் புனிதவேல் அவர்கள் 2011 செப்ரெம்பர் மாதம் விமானத்திலிருந்து குதித்துத் தனது மனைவியின் பெயரால் நிதிசேர்த்து சனிபுரூக் மருத்துவமனைக்கு வழங்கியிருப்பதையும் குறிப்பிடல் தகும். தொடரும்..

கவிஞர் வி. கந்தவனம்





# அன்புடைமை - 19


அன்பான வாசகர்களே! கணவன், மனைவி இருவருக்குமிடையே அன்புடைமையின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கடந்த இதழில் உரையாடியிருந்தோம். நண்பர்களிற்கு இடையிலும் அன்புடைமை இருக்கும் பொழுது நல்ல புரிந்துணர்வு ஏற்படும். நண்பர்கள் மீது அன்பு செலுத்திப் பழகி வரும்பொழுது நட்பு நீடிக்கும். நண்பர்களால் மகிழ்ச்சி ஏற்படும். நட்பு என்பது இருவர் அல்லது மேற்பட்ட எண்ணிக்கை உடையோர் மீது ஏற்படும் பரஸ்பர அன்பு உறவு என்று கூறப்படுகின்றது. அன்புடைமை என்பது நட்பின் வலிமைக்கு மிகவும் முக்கியமானது. 'உண்மையான நட்பைவிட பெறுமதியான ஒன்று இவ்வுலகில் எதுவுமில்லை என்பது' தோமஸ் அக்குயினாஸ் அவர்களின் முதுமொழி. இத்தகைய பெறுமதிமிக்க நட்பில் அன்புடைமை முக்கியமான பங்கை வகிக்கின்றது. ஏனையவர்கள் நமது புன்னகையை நம்புகின்ற பொழுது உண்மையான நண்பன் நமது கண்ணில் உள்ள வலியைக் கண்டு கொள்வான். மனித வாழ்க்கையில் நம்பிக்கை, எதிர்பார்ப்பு, அன்பு என்று மூன்றும் முக்கியமானவை என்றும் அவற்றில் அன்புதான் மிகவும் உயர்ந்தது என்றும் கூறப்படுகின்றது. இன்றைய காலத்தில் அன்புதான் உலகில் அதிகம் தேவைப்படுகின்றது. அன்பு, நட்பு என்ற இரண்டு சொற்கள் பொறிக்கப்பட்ட வாழ்த்து மடல்கள் (Greetings Cards) அதிகம் விரும்பப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒருவர் தனிமையாக இருப்பது கூடாது என்ற கருத்தை உளவிய லாளர்களும், உயிரியல் ஆய்வாளர்களும், ஆன்மீகவாதிகளும் ஏற்றுக் கொள்கின்றார் கள். தொடர்ச்சியாகத் தனிமையில் இருப்பவர்களுக்கு எல்லாவற்றிலும் ஒரு வெறுப்பு ஏற்பட்டு விடும். தனிமையில் உள்ளவர்கள் ஏதோ ஒன்று இல்லாமல் இருப்பதாக நினைப்பார்கள். தனிமையைத் தவிர்ப்பதற்கு நட்பு அவசியம்.

அந்த நட்பு மகிழ்ச்சியுடையதாக இருப்பதற்கு அன்புடைமை என்ற சொத்து நண்பர்களிடம் இருக்க வேண்டும். அன்பில் பல வகை உள்ளன. நாம் கடவுளின் குழந்தைகள் என்று நினைக்கும் பொழுது நாங்கள் நேர் மறையான சுய ஏற்பு (Self Acceptance) நிலையில் இருப்போம். இது நம்மீது நமக்கு அன்பு ஏற்பட்டு வாழ்க்கையில் நல்ல மனிதராக வாழ்வதற்கு வழிவகுக்கும். அன்பில் உறுதிப்பாடு, ஈடுபாடு, பரஸ்பரம், வெளிப்படைத்தன்மை, பகிர்வதில் உள்ள விருப்பம், நம்பிக்கை, எதிர்பார்ப்பு எனப் பல உள்ளடக்கங்கள் உள்ளன. நம்மீது நமக்கு அன்பு ஏற்பட்டால் மட்டுமே நம்மால் மற்றவர்கள் மீது அன்பு செலுத்த முடியும் என்பதை இந்தக் கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிட்டிருக்கின்றேன். நம்மீது நாம் அன்பு செலுத்தாவிட்டால் நடத்தல், சாப்பிடுதல், தூங்குதல் போன்ற செயற்பாடுகளைச் செய்கின்ற ஒரு சடப்பொருளான மனிதராகி விடுவோம் என்று உளவியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். ஆங்கிலத்தில் நண்பருக்குரிய சொல்லான 'Friend' என்பது அங்கிலோ சக்சன்




இலிருந்து வந்த சொல் ஆகும். இதன் கருத்து to love என்பதாகும். அகராதியில் ஒருவருக்கு ஒருவர் நெருக்கமான உறவு என்றும் கருத்து கூறப்படுகின்றது. நட்பு என்பது அன்பினால் பிணைக்கப்படுகின்றது. எமது அன்பை நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ளாது நல்ல நட்பை எதிர்பார்க்க முடியாது. சாதாரணமாகச் சில நண்பர்கள் நோக்கம் கருதி அல்லது சுயநலப் போக்குடன் நட்பைக் கையாள்வதைக் காண்கின்றோம். ஒருவர் முழு அன்போடு நம்பிக்கை வைத்து நண்பராக பழகும் பொழுது அவர்கள் வைத்திருக்கும் அன்பு நிறைந்த நட்பைத் தமக்கு ஆதாயமாகப் பயன்படுத்தும் பலர் இருக்கின்றார்கள் என்பது மிகவும் கவலைக்குரியது.

நண்பர்களால் வாழ்க்கையில் உயர்ந்தவர் களும், மகிழ்ச்சியாக இருப்பவர்களும் உள்ள அதே சமூகத்தில் நண்பர்களை ஏமாற்றுபவர்களும், அன்பு இல்லாத நண்பர்களும் இருப்பதை நாங்கள் காண்கின்றோம். உண்மையான நட்பு எவ்வளவு தூரம் அன்பினால் நிறைந்திருக்கின்றது என்பதிலேயே தங்கியுள்ளது. நட்பு என்பது ஆண், பெண் என்ற பாலியல் பாகுபாடு, வயது வேறுபாடு கடந்து ஏற்படக் கூடியது. நட்பில் பல வகையான எல்லைகளைக் காணலாம். மனித தொடர்பாடலிலும் அன்பு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இருவர்களுக்கிடையில் நீண்ட காலத்தில் படிப்படியாக ஊற்றெடுக்கும் அன்பு நிலையான நட்பை ஏற்படுத்துகின்றது. ஆய்வுத் தகவலின்படி சமூகத்தில் நட்பு புறக்கணிக்கப்படுவதாகவும் இதுவும் சமூகத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கு முக்கியமானதாக உள்ளது என்றும் கருதப்படுகின்றது. 'ஏழ்மையிலும், துன்பமான வாழ்க்கைச் சூழ்நிலையிலும் உண்மையான நண்பர்கள் அகதிகளாக்கப்படுகின்றார்கள்' என்று புகழ் பெற்ற தத்துவஞானி அரிஸ்டோட்டல் கூறியுள்ளார். ஆனால் கஸ்டமான நேரத்தில் நட்பின் பெறுமதியை உணர்ந்து கொள்கின்றோம். நாங்கள் இடைக்கிடை நமது நண்பர்களைப் பற்றி மீளாய்வு செய்ய வேண்டும். நட்பில் ஏற்படும் அன்புத் தட்டுப்பாடு உட்படப் பல்வேறு விடயங்களை ஆராய்ந்து நாம் விடும் தப்புக்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். இதனை ஆங்கிலத்தில் friendship audit என்று சொல்வார்கள். அரிஸ்டோட்டல் அவர்கள் நண்பர்கள் தாங்கள் பெற்றுக் கொள்வதை விட கொடுத்துக் கொள்வதில் நாட்டம் செலுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். மேலும் நட்பு என்பது மகிழ்ச்சி போன்று மறைமுகமாகவே ஏற்படுகின்றது என்றும் அரிஸ்டோட்டல் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். நேர்மை (Honesty), நடத்தை (Character), பேரார்வம் (passion) போன்றவற்றால் உருவாகின்றது. நட்பு நல்ல வாழ்க்கை முறையால் ஏற்படுவது. ஆனால் இந்தக் காலத்தில் இது ஒரு வியாபார நோக்கில்




பார்க்கப்படுகின்றது. நெருங்கிய நண்பன் என்றால் கண்ணாடியில் ஏற்படும் எமது விம்பத்தைப்போன்றது என்று வேர்ணன் என்பவர் கூறியுள்ளார். நாங்கள் நட்பினை அபிவிருத்தி செய்தால் தனிமை, மகிழ்ச்சியின்மை போன்றவற்றில் இருந்து விடுதலையும் பெறலாம். நட்பில் அன்பூற்று நிறைந்திட நட்பு பொலிந்து மகிழ்ச்சி தரும் என்பதையும் மனதில் நிறுத்திக் கொள்வோம்.

அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

நன்றி. வணக்கம்.
தொடரும்...



- அகணி -
authorakani@yahoo.com

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022


5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university.

Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at
Scarborough & Stouffville

Contact: 647.340.9490/ 416.732.2228



# ‘விளம்பரம்’ வெள்ளி விழா

விளம்பரம் பத்திரிகையின் வெள்ளி விழா 2015 மே 24இல் Queen Palace விருந்து மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. கடந்த 25 ஆண்டுகளாக தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் விளம்பரத்தின் இந்த வெள்ளி விழாவிற்கான சிறப்பு சந்திப்பும் கலந்துரையாடலும் மாலை 4 மணிக்கு ஆரம்பமானது.

சரியாக 5 மணிக்கு நிகழ்ச்சி தொகுப்பாளர் களான S. கணேஷ் அவர்களையும், Hollandஇல் இருந்து வந்திருந்த சத்தியராணி செல்வகுமாரையும் ஜே. ஏகாம்பரம் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

விளம்பரம் பதிப்பாளர் ராஜா மகேந்திரன் இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வந்திருந்த கலாநிதி சுதர்சனன் சுப்பிரமணிய ஐயர் அவர்களுடனும் சிறப்பு விருந்தினராக வந்திருந்த கலாநிதி, கவிஞர் சேரன் அவர்களுடன் மேடையில் சமூகம் அளித்திருக்க, சத்தியபாமா மகேந்திரன், கலா விஜயபாலன் மற்றும் நிலாணி கமல் அவர்கள் மங்கல விளக்கேற்றுதலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது.

மங்கல விளக்கேற்றலை தொடர்ந்து ஆதிரை விமலநாதன், சங்கவை விமலநாதன் தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழில் கனேடிய தேசிய கீதம் பாடினார்கள். அதைத் தொடர்ந்து விளம்பரம் பத்திரிகையில் நீண்ட காலம் எழுதிவந்த காலம்சென்ற அதிபர் பொ.கனகசபாபதி, கந்தையா சண்முகம், பேராசிரியர் சோமசுந்தரம் மற்றும் உலக அமைதிக்காக உயிர்நீத்த அனைவருக்குமாக ஒரு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து விளம்பரம் இதழின் ஆசிரியரான சத்தியபாமா மகேந்திரன் இவ்வெள்ளி விழாவிற்கு வருகை தந்திருந்தோர் எல்லோரையும் வரவேற்று உரைநிகழ்த்தினார். வரவேற்புரையைத் தொடர்ந்து விளம்பரத்தின் 25ஆவது ஆண்டையொட்டி நடத்தப்பட்ட உலகளாவிய நான்கு போட்டிகளில் ஒன்றான குறுந்திரைப் படக்கதைப் போட்டி முடிவுகளை அப்போட்டி யின் நடுவர்களில் ஒருவரான கவிஞர் அ.கந்தசாமி அறிவித்தார். இப்போட்டியின் வெற்றியாளர்களை தெரிவுசெய்யும் நடுவர்களாக கவிஞர் அ.கந்தசாமியுடன் பேராசிரியர் சொர்ணவேல் மற்றும் ரதன் அவர்களும் இருந்தார்கள்.

குறுந்திரைப்படக்கதைப் போட்டியின் மூன்றாம் பரிசு ரொறொன்ரோ, கனடாவை சேர்ந்த இராசமணி சிவலிங்கம் எழுதிய ‘வேண்டும் தமிழ்’ இற்கு கிடைத்தது. இதற்கான 200 டொலர் பரிசை Building Experts உரிமையாளர் N. தயாபாரன் வழங்கினார்.

இரண்டாம் பரிசு மார்க்கம், கனடாவைச் சேர்ந்த சோ. ராமேஸ்வரன் எழுதிய ‘கனடா



பிள்ளைகள்’ இற்கு கிடைத்தது. இதற்கான 300 டொலர் பணப்பரிசை MS 7 Quality Pre owned auto sales உரிமையாளர் M. சிவ-பாலன் வழங்கினார்.

முதலாம் பரிசு சென்னை, தமிழ் நாட்டைச் சேர்ந்த S.ராஜகுமாரன் எழுதிய ‘அதிதி’ இற்கு கிடைத்தது. இதற்கான 500 டொலர் பணப்பரிசை Homelife GTA Realityஐச் சேர்ந்த ராஜ் ராஜரட்ணம் வழங்கினார்.

குறுந்திரைப்படக்கதைப் போட்டியின் முடிவு கள் நடைபெற்ற பின்னர் நடந்த சில நிகழ்வுகளின் பின்னர் கவிதைப் போட்டியின் முடிவுகளை அப்போட்டியின் நடுவர்களில் ஒருவரான கவிதாயினி இராஜ்மீரா இராசையா அறிவித்தார். இப்போட்டியின் வெற்றியாளர் களை தெரிவுசெய்யும் நடுவர்களாக இராஜ்மீரா இராசையாவுடன் கவிஞர் சேரன், செழியன், ரஞ்சினி ஸ்ரீகதிர்காமநாதன் மற்றும் கந்தசாமி முத்துராஜா இருந்தார்கள்.

கவிதைப் போட்டியின் மூன்றாம் பரிசு கோலாலம்பூர், மலேசியாவைச் சேர்ந்த வேலாயுதம் கெங்காதரன் எழுதிய ‘துயர் நிழல்’ இற்கு கிடைத்தது. இதற்கான 200 டொலர் பணப்பரிசை A1 Ink Rainbow நிறுவன உரிமையாளர் S.விஜயபாலன் வழங்கினார்.

இரண்டாம் பரிசு சென்னை, தமிழ் நாட்டைச் சேர்ந்த சில்வியா மேரி எழுதிய ‘ஒற்றை முலை’ இற்கு கிடைத்தது. இதற்கான 300 டொலர் பணப்பரிசை Homelife GTA Realityஐச் சேர்ந்த சீலன் ஐயாத்துரை வழங்கினார்.

முதலாம் பரிசு திருப்பூர், தமிழ் நாட்டைச் சேர்ந்த K. இந்திரஜித் எழுதிய ‘300 பருத்தி வீரர்களும் ஒரு தலைவரும்’ கவிதைக்கு கிடைத்தது. இதற்கான 500 டொலர் பணப்பரிசை Yogas Super Market நிறுவனத்தின் உரிமையாளர் சார்பில் திருமதி சாந்தி தவம் வழங்கினார்.

கவிதைப் போட்டியின் முடிவுகள் நடைபெற்ற பின்னர் நடந்த சில நிகழ்வுகளின் பின்னர் கட்டுரைப் போட்டியின் முடிவுகளை அப்போட்டியின் நடுவர்களில் ஒருவரான திரு. மணி வேலுப்பிள்ளை அறிவித்தார். இப்போட்டியின் வெற்றியாளர்களை தெரிவு செய்யும் நடுவர்களாக திரு. மணி வேலுப்பிள்ளையுடன் பேராசிரியர் இ. பாலசுந்தரம், கலாநிதி குலமோகன், கலாநிதி

தொடர்ச்சி 32ஆம் பக்கம்




# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

விளம்பரத்தின் 25ஆம் ஆண்டுச் சிறப்புகள் நன்றே நிகழ்ந்தன. 25 வருடங்களாக வாசகர்களுடன் கைகோர்த்து நடந்து கொண்டிருக்கும் விளம்பரம், தன் பணியில் விரிவுகள் ஏற்படுத்தி, கால ஓட்டத்துடனான மாற்றங்களுக்கு ஒத்ததான வகையில் ஓடி, தமிழுக்கு மேன்மை செய்வது மகிழ்ச்சிக் குரிய விடயம். வாழ்க விளம்பரத்தின் செயற்பாடுகள். வளர்க அதன் செழிப்பான நடை. இவ்வளர்ச்சிக்காக பெரும்பாடுபட்டுக் கொண்டு உழைக்கும் அனைவருக்கும் உந்து சக்தியாக இருக்க எங்களது வாழ்த்துகளைக் கூறிக்கொண்டு, எமது 'அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்' என்னும் விடயத்துள் நுழைவோம்.

வாசகர்களே, உண்மையில் இப்பகுதியானது பல அறிவியல் விடயங்களை மெதுமையான முறையில் தருகின்ற பகுதி என்பதனை மீண்டுமொரு தடவை ஞாபகத்திற்குக் கொண்டு வருகின்றேன். சென்ற தடவையில் கூறியபடியே, இம்முறையில் இருந்து மனித குலத்தின் விண்வெளி பற்றிய செய்முறை வெளிப்பாடுகள் பற்றிப் பார்ப்போம். அவ்வகையில் அம்புலிப் பயணங்கள் சம்பந்தமாக விபரங்களைப் முதலிற் தெரிந்து கொள்வோம். அதற்கு அனுசரணையாகச் சில உலகியல் விபரங்களை மீட்டுப் பார்ப்போம்.

பதினைந்தாம் நூற்றாண்டில் இருந்து ஐரோப்பாவில் அறிவியல் விடயங்கள் விருத்தியடையத் தொடங்கின. அதன்வழியில் பிரபலமான பல அறிவியலாளர்களை எங்களால் ஞாபகத்திற்குக் கொண்டு வர முடியும். கொப்பநிக்கஸ் முதற் கொண்டு கலிலியோ, நியூட்டன், ஐகன், யங் எனப் பலர் வரிசையாகக் காலத்திற்குக் காலம் தோன்றி அறிவியலை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். கணித மேதைகள், தத்துவஞானிகள், அரசியலாளர்கள்,



உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மொழியியலாளர்கள் எனப் பலவகைகளிலும் போட்டி போட்டுக் கொண்டு ஐரோப்பிய நாடுகள் தனித்தனியாகவும், கூட்டாகவும் வளர்ந்து கொண்டிருந்தது மனித குலத்திற்கான நல்வாய்ப்பாகவே இருந்தது. சமய இடைஞ்சல்கள் இல்லாததால் அறிவியல் தன்னியல்பில் வளர்ந்து வருகையில், பத்தொன்பதாம் நூற்றாண்டானது, 'அறிவியலின் பொற்காலம்' எனக் கூறப்படக் கூடிய அளவுக்கு விருத்தியடைந்தது. இனி அறிவியலில் ஒன்றுமே கண்டு பிடிக்கப்பட முடியாது, எல்லாமே கண்டு கொண்டோம் என இறுமாப்படைந்த விஞ்ஞானிகளும் கூட இருந்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டானது பெரும் மாற்றங்களுடன் ஆரம்பமாகியது. சார்பியல், குவாண்டம் எனும் அற்புதமான, இரண்டு பிரிவுகள் இயற்பியலினுள் புதிதாகத் தோன்றிப் பேரண்டம் பற்றிய புதுப்புது வியாக்கியானங்களைக் கொடுத்தது. பொதுவாகவே எல்லா ஐரோப்பிய நாடுகளும் தத்தமது பங்கிற்கு அறிவியல் விடயங்களுக்கான பங்களிப்புகளைச் செய்து கொண்டிருந்தாலும், அறிவியல் உலகின் மையம் என வர்ணிக்கப்படக் கூடிய நாடாக ஜேர்மனிதான் இருந்தது. இயற்பியலின் அரிய கண்டுபிடிப்புகளாக சார்பியலும், குவாண்ரமும் தோன்றிய இடமாக ஜெர்மனிதான் இருந்தது. மார்க் பிளாங், அயன்ஸ்ரைன் ஆகியோர் குவாண்ரத்தின் தொடக்ககார்களாக இருந்தார்கள். சார்பியல் விபரத்தை வெளிக் கொண்டு வந்தவரும் அயன்ஸ்ரைன்தான். ஆனால், விஞ்ஞானம், விஞ்ஞானிகள் முதல் சாதாரண மக்களையும் ஆச்சரியப்படுத்திக் கொண்டிருந்த அக்காலத்தில்தான் வில்லியம் கெய்சரின் முதலாம் உலகப் போரும், ஹிட்லரின் இரண்டாம் உலகப் போரும் பெரும் அழிவுகளையும், மனிதர்களுக்குப் பெரும் பயப் பிராந்தியையும் கொடுத்திருந் தன. அதிலும் இரண்டாம் உலகப் போர் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, உலகின் சகல அறிவியல் விடயங்களின் வளர்ச்சி களையும் மட்டுப்படுத்திக் கொண்டிருந்தது.

இருப்பினும் இக்காலத்திற்றான் அணு சக்தியை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெறத் தொடங்கி, அமெரிக்கரால் அம்முயற்சியில் வெற்றியும் பெற முடிந்தது. அணுசக்தி, பெரும்பெரும் ஆக்க காரியங்களுக்குப் பாவிக்கப்பட்டாலும் மனித குலத்தினை அச்சுறுத்தும் ஒன்றாகவே அதிகம் மனிதர்களால் அறியப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த நிலையில் விஞ்ஞானம் மீண்டும் துரித கதியில் வளரத் தொடங்கியது. தாம்தான் அறிவியல் விடயங்களில் அதிக முன்னேற்றம் அடைந்தவர்கள் என்பதனைக் காட்ட அக்காலத்தில் இருந்த இரண்டு வல்லமைகள் தமக்குள் போட்டி போட்டுக்கொண்டு செயற்பட்டன. இதனை ஒரு 'பனிப்போர்' என்றே ஆய்வாளர்கள் விபரித்தார்கள், இன்றும் கூடக் கூறுகின்றார்கள். இப்படியான பனிப்போரின் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் விண்வெளிப் பயண முயற்சிகளும்.


ரைட் சகோதரர்கள் ஆகாயத்தில் மிதந்து செல்லும் வழியினைக் காட்டிவிட, ஆகாயத்தில் மெதுமெதுவாகப் பயணம் செய்யத் தொடங்கிய மனிதர்களுக்குப் பெரிய பெரிய விண்வெளிப் பயணங்கள் செய்ய வேண்டும் என்ற ஆசை கொஞ்சம் கொஞ்சமாய் எழத் தொடங்கியது, அதற்கான முயற்சிகளும் நடைபெறத் தொடங்கின. இருப்பினும் இது சற்று அதிகமான, பொருந்தாத ஆசை என்று கூறியவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். எதனைச் செய்தாலும் அதனை எதிர்க்கும் புத்தி சீவிகளும் எக்காலத்திலும் இருப்பார்கள் தானே! இவ்வகை எதிர்ப்புகளைத் தடை களைத் தாண்டிச் செல்கையிற்தானே வெற்றிகள் வந்து குவிகின்றன. விண்வெளிப் பயணங்கள் பற்றிய எதிரான போக்குகளும் கருத்துகளும் இருந்தாலும் 'வானத்தில் ஏறிச் சந்திர மண்டல வாசலைத் தொடலாமா?' என்று ஆதங்கமாக் கேள்விகள் எழுப்பியவர்களும் இருந்தார்கள். நிலவிற் குடியேறுவோம் என்றும் கனவு கண்டவர்களும் இருந்தார்கள். என்ன! எங்கள் பாரதியின் நினைவு வருகின்றதா?

இப்படியான நிலையில்தான் மண்ணவரின் அம்புலிப் பயணங்கள் மெதுமெதுவாகத் தொடங்கின. சோவியத் யூனியனும், (இரசியா) அமெரிக்காவும் இப்பயண அலுவல்களில் போட்டி போட்டுக் கொண்டு செயற்படத் தொடங்க, சாதாரண மக்களும் இவ்விடயம் பற்றி மிக ஆர்வமாக அவதானிக்கத் தொடங்கினர். தங்களுக் குள்ளே எந்த நாடு முதலில் சந்திரனுக்குப் போகும்? எந்த நாட்டினர் முதன் முதலில் அம்புலியில் காலடி வைப்பார்கள்? போன்ற விவாதங்கள் கூடச் செய்யத் தொடங்கினர். இப்படியாகப் பரபரப்பாக இருந்தாலும் யாராவது ஒருவராலும் குறிப்பிடத்தக்கதான வெற்றியைப் பெறமுடியவில்லை, சந்திரனுக்கு மனிதர்களை அனுப்பும் முயற்சியில்.

விண்கலங்களை சந்திரத் தரையில் இறக்குவது கூட விஞ்ஞானிகளுக்குப் பெரிய விடயமாக இருந்தது. ஆனாலும் ஏதோ ஒருவிதத்தில், கடின உழைப்பின் பின்னால், சந்திரத் தரையில் மனிதர்களின் விண் கலங்கள் இறங்கத் தொடங்கின. ஆரம்பத்தில் சோவியத் யூனியனே இதில் கணிசமான அளவில் வெற்றி பெற்றது எனலாம். அமெரிக்கர்களுடனான போட்டியில் தாம் முன்னணியில் நிற்பதாக சோவியத் யூனியன் பெருமிதமடைந்து கொண்டது. ஆனால், அம்புலிப் பயணத்தின் மெதுமெது வான முன்னேற்றப் பாதையில், அமெரிக்கர்கள் திடீரெனச் சடுதியில் பெரிய அளவில் முன்னேற்றம் கண்டார்கள். அமெரிக்கர்களும், இரசியர்களும் அம்புலிப் பயணங்களின் வெற்றி பெற்றதற்கு அடிப்படையாக இருந்தவர்கள் உண்மையில் ஜெர்மனியர்களே என நம்புபவர்கள் இன்றும் இருக்கிறார்கள். இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியர்கள் படு தோல்வியைச் சந்தித்ததின் பின்னராக, ஜெர்மனியரின் அறிவியல் உட்படப் பலவகையான வளங்களும் அமெரிக்கர்களாலும், இரசியர் களாலும் பகிர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டன. அத்துடன், ஜெர்மனியரின் அறிவியல் மற்றும் பொருளாதார முயற்சிகள் கூட மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

அம்புலிக்கான பயண விபரங்களின் ஆரம்பக் கூத்துகள் இன்னமும் இருக்கின்றன. அவற்றை மறுமுறை சந்திக்கையில் பார்ப்போம்.


- கனி -
416.261.1348
leptons@hotmail.ca




# REFINANCE TO LOWER RATES & SAVE 75%

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000 @2.9% | 1,498.02 | - |
| Car Loan | 21,000 @7.5% | 764.25 | 0.00 |
| Line Of Credit | 16,000 @6.5% | 566.67 | 0.00 |
| Line Of Credit2 | 12,500 @7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @24% | 150.00 | 0.00 |
| | | | |
| New Mortgage Payment | 386,500 @2.5% | | 1,524.55 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | **4,014.20** | **1,524.55** |

MONTHLY SAVING

$2,489.65

VERICO® MORTGAGE BROKERS NETWORK

APPLY ONLINE kiruba.ca OR Call Me

ULTIMATE MORTGAGE & FINANCIAL SOLUTIONS
LIC#: 11995
305-5200 Finch Ave East
Scarborough, ON. M1S 4Z5

KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent
LIC#: M12002440

416.298.2777
info@kiruba.ca

வாகன விபத்து MOTOR VEHICLE ACCIDENT

SKT PARALEGAL SERVICE

CRIMINAL MATTERS
SUMMARY

416.803.5296

Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்



SK THEESAN

TRAFFIC TICKETS

LICENSED PARALEGAL sktheesan@gmail.com

MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY

TRAFFIC TICKETS
DON'T MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS

CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

# PROJECT BY "CONCORD"

# LESLIE & SHEPPARD

## *Tango 1*

## *Tango 2*





**5% CREDIT TO BUYER**

**2 YEARS RENTAL GUARANTEE**

**No Interim Closing**

- *Price Starts From High $200's*
- *Quick Closing...... Low Interest Rate*

**HomeLife / GTA Realty Inc., Brokerage***

**5215 Finch Ave, E., #203 Toronto, ON**

**Tel: 416.321.6969**

HOMELIFE HIGHER STANDARDS

**Independently Owned & Operated*


JRS AUTO TECH
OPEN 24 HOURS
7 DAYS A WEEK
MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS
VISA
Free Inspection & Diagnostics
Complete Car & Truck Care
Licensed Mechanics
Insurance Work Done
All Fluid Top Ups & A/C Repairs
Fuel Injection Service & Muffler/ Turbos
Courtesy Drop Off & Pick Up Available
Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash
SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors
TIRE SPECIALS
NEW TIRES FROM
$75
USED TIRES FROM
$35
FREE
OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV
BRAKE JOB
STARTING FROM
$159
WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans
Castrol
REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95
TRANSMISSION FLUSH
Starting From...
Imports
$74.95
Radiator Flush
$79.95
Domestic
$149.95
ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection
2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT → 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech
*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

# FOR SALE



WHITBY - DETACHED
2-STOREY
BEDROOMS: 3
WASHROOMS: 3
**COMING SOON**



AJAX - DETACHED
2-STOREY
BEDROOMS: 3
WASHROOMS: 3
**$479,000**

சொந்த வீடு தொலைவில் இல்லை!
தகுந்த வீட்டை சுலபமாக பெற
24/7 மணி நேர சேவை வழங்குகிறேன்.

*Sothees Means Service*
**Buying Selling Residential & Commercial**



**HOMELIFE / Miracle Realty LTD., Brokerage**
*Independently Owned and Operated*

**SOTHEES Kathirgamathamby**
Sales Representative

**Toll Free: 1855 SOTHEES (768-4337)**



Ajax | Markham | Scarborough

நடன வகுப்புகள் ஆரம்பம்

**Bharathanatyam**
**Bollywood**
**Gaana**

irudaya
DANCE COMPANY

ஆசிரியர்கள்:- "நாட்டியகலாமணிகள்"

## நிவேதா மூத்ததம்பி
## கீர்த்தனா அருளானந்தராஜா

- அரங்கேற்றம் முடித்த மாணவிகள் (ஆசிரியர்: - வாசு சின்னராசா)
- அண்ணாமலைப் பல்கலைகழகப் பட்டதாரிகள் (Canada Campus)
- நடன அமைப்பாளர்கள் (8 வருட அனுபவம்)
- மேடை நிகழ்வுகளில் பல வருடங்களாக சிறந்த அனுபவம்



மேலதிக தொடர்புகளுக்கு:
(647)967-1994 (416)319-0164




# RAMA BAHRI
Sales Representative
**416 565-2596**

Homelife/GTA Realty Inc., Brokerage*
Independently Owned and Operated

# MEADOWVALE / LAWSON



Spectacular custom built appx. 3600 sq.ft home in prestigious West Rouge. It offers 5 Bedroom +1 finished basement with separate side entrance. 5400 sq. ft. living space. Loaded upgrades hardwood floors Gourmet kitchen with granite counters 2 marble fireplaces. Quiet neighbourhood, great curb appeal. Convenient location to TTC. U of T GO train 401 lake and parks. Must see, won't last! **$995,000**

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# விளம்பரத்தின் 25ஆவது ஆண்டு விழா



25 ஆண்டுகளை ஆர்ப்பாட்டமின்றி
அமைதியாக பதிவு செய்து
தரமான செய்திகளை வாசகர்களிடம் கொண்டு சென்று
வெற்றி பெற்ற, குறைந்த விளம்பரங்களை கொண்ட
விளம்பரம் பத்திரிகைக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்...முதலில்

25வது விழாவின் சிறப்பை எப்படி எழுதுவது...
மீண்டும் அந்த எளிமையால் விளம்பரம்....
வந்தோர் மனங்களில் உயர்ந்து நின்றதனை கண்டு
நானும் ஓர் அங்கம் என்று பெருமை கொண்டேன்....

விழா சிறப்பின் முதல் வெற்றி ஒழுங்கமைப்பு...
பொறுப்பாளர்களின் திறமையான பங்களிப்பு பாராட்டுக்குரியது...
ஒரு பத்திரிகைக்கான தரமான செயற்பாடுகள் யாவையும்
கண்டு மகிழ்ந்தோர் பலரை நான் கண்டேன்..

விளம்பரத்தை வாழ்த்தியவர்கள் முக துதி பாடவில்லை
மனம் நிறைந்து வாழ்த்தியதை காண முடிந்தது...
காரணம் நேர்மையின் ஊடகம் என்பதுவே...
என்றும் வெல்லும் நேர்மையே என்பதற்கு சரியானது நம் விளம்பரமே..

கவிஞர் சேரனின் அழகான உரை... அல்ல... அல்ல..
பத்திரிகை சார்ந்த சரியான விமர்சனம்... அதுவும்
நம் விளம்பரத்துக்கு பெருமை சேர்த்தது...
மீண்டும் உண்மையே ஜெயிக்கும் என்பதை சேரனும் ஒப்புவித்தார்...

வித்தியாசத்திற்கும் விளம்பரமே என்பதனை அழகான....
விழாவின் பிரதம விருந்தினரின் உரை கங்கணம் கட்டி நின்றது
உண்மையிலேயே இந்த விழா ஆடம்பரத்திற்கானதல்ல என்பதனை
பிரதம விருந்தினரின் சிறப்பு 'சமநிலை' எடுத்துக் காட்டியது.. வாழ்த்துக்கள்....

இந்த விழாவின் வெற்றிக்கு உழைத்த
அனைவருக்கும் பாராட்டுக்கள்...
உங்களின் நேர்மையின் உழைப்பால்... விளம்பரம்
என்றும் ஜெயிக்கும் என்று கூறி..... என்
வாழ்த்துக்களையும் பதிவு செய்து விடைபெறுகின்றேன்...

- ஆசீர் அன்ரனி -

# நிமோனியா (சளிச்சுரம்) (Pneumonia)

கடந்த இதழ் தொடர்ச்சி....

ஒருவருடைய நோய் எதிர்ப்புச் சக்தி குறையும்போது வைரஸ், பக்ரீறியா போன்ற நுண்கிருமிகள் (parasites) வலுப்பெற்று விடுகின்றன. சமூகத்தில் உள்ள பொதுவான நிமோனியாவை community acquired pneumonia என்று அழைப்பர். அதாவது, இவ்வகையான நிமோனியா நுரையீரலின் ஒரு பகுதியைத் தாக்குகிறது. இதனை lobar pneumonia என அழைக்கின்றனர். பக்ரீரியாவினாலும், அதுபோன்ற கிருமிகளினாலும் தோன்றுவது mycoplasma ஆகும். இந்நோய் சிலருக்கு பங்கசுக் கிருமிகள் மூலம் ஏற்படலாம். நிலம், பறவை எச்சங்கள் மூலம் பங்கசு ஏற்படுகிறது.

ஜெயமோகன் தொல் தமிழகத்தின் அன்றைய வாழ்வை அருமையாகச் சித்தரிக்கிறார். கருங்கண் கொற்றவைகளுக்கு தன் தலையரிந்து தற்பலி செலுத்துகிறான் ஒரு முதுமறவன். அவனுக்கு நடுகல் நாட்டப்படுகிறது. பாணர்கள் பாடுகின்றனர். மாநாய்கன் மகள் கண்ணகிக்குக் கல்வி கற்பிக்க பெருஞ்சாத்தன் முன்வருகிறார். செங்கணார் பாக்கள் அவள் இள நெஞ்சில் பொருளுக்குப் பொருள் தேடி அலைகிறான். கணிகையரால் கவரப்படுகிறான். கொற்றவையின் தொல்குரலைப் பரதவர் குலம் காத்தது. பூசனை உரிமையும் கணிதமும் கருதல் அறிவும் கணிகையர் வசம் இருந்தன. சாம்பர் குலச்சம்புகத்தெய்வங்கள் சதுக்க பூதங்களாயின. வேள்வியும் கேள்வியும் உடையவரே வேதியர் ஆயினர். கண்ணகியை மணந்த கோவலன் மாதவியிடம் மையல் கொண்டான். அவள் மீட்டிய யாழிலும் நாட்டியத்திறனிலும் தான் ஈட்டிய பொருள் யாவற்றையும் இழந்தான். காற்சிலம்புகள் குல அடையாளங்கள். கண்ணகி அவற்றை இழக்கிறாள். அவளின் பயணம் நோவற்ற சாவற்ற முடிவற்ற பயணம். அச்சம் அளிக்கும் கட்டின்மையின் ஆளுருவமாக நீலி ஆகிறாள். கண்ணகியோ நீலியோ கரைகளை மீறுகையில் தங்களைப் பெண்ணென்று உணர்கின்றனர். கட்டுடைக்கும் பேராற்றலைப் போட்டுடைக்கும் கற்புக்கரசியர் வேலிகளுக்குள் தங்களை விலங்கிட்டுக் கொண்டனர். பேய்க்கோலம் பூண்ட பெண் கோலம் தடைகளைத் தாண்டி பீடங்கள் ஏறியது. அரக்கர்களை எதிர்த்து அரண்களை உடைத்துப் புவியைப் புதுக்கும் நெடும்பயணத்தில் பெண் தெய்வமாகிறாள். கன்னியும் தாயும் ஆகிறாள். நீர்மகள் நிலமகளானாள். கற்பும் களவும் வகுத்து ஆணினம் அவளுக்கு கடிவாளமிட்டது.

தாய்வழிச் சிறப்பிக்க சிந்துவெளியும் பொதிகையும் கண்ட அரச இலை அன்பின் சின்னம். தாலம் தாலியானது. அதுவே பெண்ணுக்கு வேலியானது. அரச மரத்து புத்தனின் ஞானம் ஓர் உருவகம். ஒவ்வொரு ஆணும் தன்னைப் பெண்ணாக உணர்தலின் பெருவிழிப்பே ஞானம். ஆணுலகின் பொய் பெண்ணுலகின் மெய். ஆணின் வெறுப்பு பெண்ணின் விருப்பு. ஆணின் இருள் பெண்ணின் ஒளி. ஆணின் கற்பே பெண்ணின் பரத்தமை நாகர்களின் நினைவில் தாய் மரபு எஞ்சியது. மானுட வாழ்க்கை மிக மிக எளியது. நமது அச்சங்களால் சுமையான வரலாறுகளால் விட முடியாத நம்பிக்கைகளால் வாழ்க்கை சிக்கலாகிறது. காவலன் கள்வனாகிறான். தெய்வங்கள் கண் மூடிக்கொள்கின்றன. கோவலன் தலை கொய்யப்படுகிறது. ஆடவரில் சான்றோர் உண்டோ? பெண்டிரில் பத்தினி உண்டோ? தெய்வம் என ஏதும் உண்டோ? தொல் மகளிர், நீர் மகளிர், கான் மகளிர், வான் மகளிர், அணங்குகள், பாவைகள், பேய்கள், பிடாரிகள், குலதெய்வங்கள் யாவும் கொற்றவை குரலில் முழங்கினர்.

பெண்களைப் பற்றிய உயர்வான சித்தரிப்பை வழங்குகின்ற பெண் தொன்மங்கள் இன்று முன்மொழியப்படும் தேசிய அடையாளங்களை மறுவரையறை செய்யத் தூண்டுகின்றன. அரசியல் முகவர்கள் முன்னிறுத்தும் இந்துப் பெருமத பாரத அன்னை ஆதிக்கர்கள் வசதிப்படி உருவான ஒன்று இந்த ஆரிய அன்னைக்கு வேர்கள் இல்லை. ஆதிக்கச் சக்திகள் முன்னிறுத்தும் பெண்மை, பாலியல் பெண்ணுக்குச் சமூகத்தில் உள்ள இடம் போன்றவை வரலாற்றுத் திரிபுகளுக்கு இன்று ஆளாகியுள்ளன. பெண்களையும், பெண் தொன்மங்களையும் ஆரியமயமாக்குவது என்பது பெண் விடுதலைக்கு குழி பறிப்பதும் தந்தை வழி ஆதிக்கங்களை நிலைநிறுத்துவதுமாகும். சாதியமும் பெண்ணடிமைத்தனமும் சமத்துவத்தை மறுப்பவை.

ஜெயமோகனின் கொற்றவை தமிழ்ச் சமூகத்தின் நெடிய வரலாற்றை பெண்ணிய நோக்கில் மறுவாசிப்பு செய்கிறது. தமிழ்ப் பண்பாட்டிற்கும் தமிழியத்திற்கும் அச்சாணியாக விளங்கும் காட்சிகளையும் உருவகங்களையும் நமது ஆழ்ந்த கவனிப்புக்குக் கொண்டு வருகிறது. தமிழ் மூதாதையர்களின் குடியேற்றமும் இடப்பெயர்வும் குறியீட்டு வடிவம் பெறுகின்றன. இவை நம் கனவிலும் நனவிலும் மனதின் உள் ஆழங்களிலும் இன்றும் பயணிக்கின்றன. எளிய தொடர்களைப் பற்றிப் பேசுகின்றன. நமது எதிர்காலத்தோடு கடந்த காலம் பின்னிப்பிணைந்திருப்பதை எடுத்துரைக்கிறது. ஆழ்வேரின் அதிகார மொழியையும் வாழ்விழந்தோரின் குரலையும் வெளிக்கொணர்கின்றன. வளம் கொழிக்கும் மதுரையின் வறுமையும், ஏழ்மையும் நம்மைத் திகைக்க வைக்கிறது.

தமிழ்ப் பெண்களின் பட்டறிவு தெறிப்பாக கொற்றவை பளிச்சிடுகிறது. நாம் நமது மதிப்பீடுகளையும் அவற்றை உரத்து வெளியிடுவதற்கான குரல்களையும் போராட்ட வாயிலாக வடிவமைத்துக் கொண்டவைகளை கொற்றவை மறுபடைப்புச் செய்கிறது.

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

# திரை விமர்சனம்...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

அபிராமியும் இந்தப் படத்தில் மறுபிரவேசம் செய்திருக்கிறார். ஆனால், நன்றாகப் பெருத்திருக்கிறார். இசை: சந்தோஷ் நாரா-யணன். 'வாடி ராஜாத்தி' தவிர மற்றவைகள் எடுபடவில்லை. பின்னணி இசை பரவாயில்லை.

வசனம்: விஜி. தொடர்ந்து நம்மைப் புன்சிரிப்பிலேயே வைத்திருக்கும் வசனங்கள், நடுத்தர வயதை நெருங்கும் பெண்களின் நிலையைப் பொட்டில் அறைந்ததுபோல் சொல்கின்றன. எதற்குமே லாயக்கற்றவள் என்று ஏளனப்படுத்தப்படும் வசந்தி சொல்கிறாள்: 'பிரசவ வலி எந்தப் பெண்ணுக்கும் வரும். ஆனால், நேசிக்கப்



படும் கணவனால் அவமானப்படுத்தப் படும்பொழுது வரும் வலி மிகவும் கொடுமையானது.' ஹோட்டல் ஏசி ரூமில் வசந்தியின் மாமியார், '∴ப்ரிட்ஜில பாலைத்தான் வைப்பாங்க. இவங்க என்னடான்னா நம்மளை வச்சுட்டாங்க' என்னும்போது அரங்கமே அதிர்கிறது.

தயாரிப்பு: நடிகர் சூரியா (ஜோதிகாவின் கணவர்). இயக்கம்: ரோஷான் அன்ரூஸ். ஆம், மலையாளத்தில் இயக்கிய அதே ரோஷன் ஆண்ட்ரூஸ்தான் இதையும் இயக்கியிருக்கிறார். முதல்பாதி கலகலப்பாகச் செல்கிறது. நடனம், சண்டைக் காட்சிகள் கிடையாது. இவை பலம் என்றால் பாத்திர வார்ப்புகள், சம்பவங்களின் நாடக தொனி படத்துக்குப் பலவீனம். வசந்தி மேல் அனுதாபம் ஏற்பட வேண்டும் என்பதற்காகத் தமிழ்ச்செல்வனை வில்லனாகக் காட்டியிருப்பது தொலைக்காட்சி தொடர்கள் பார்ப்பதுபோல் இருக்கிறது. அவரை யதார்த்தமாகச் சித்தரித்திருக்கலாம். நடுத்தர வயது பெண்களின் பிரச்சினையைப் பேசுவதுடன் இயற்கை வேளாண்மை பற்றியும் கவனம் செலுத்தியிருப்பது பாராட்ட வேண்டியது. ஆனால், வசந்திக்கு இயற்கை வேளாண்மையில் ஈடுபாடு எப்படி வந்தது என்பது சொல்லப்படவில்லை. வசந்தி உரையைக் கேட்டுவிட்டுச் சட்டசபையில் எல்லா உறுப்பினர்களுக்கும் இயற்கை வேளாண்மை பாடம் எடுப்பதாக அமைச்சர் சொல்வதும் குடியரசுத் தலைவரிடம் இருந்து இரண்டாவது அழைப்பு வருவதும் நம்பும்படியாக இல்லை.

தங்களுக்கென ஓர் அடையாளம் வேண்டும் என்றும் குடும்பத்தால், கணவனால், பிள்ளைகளினால் ஏளனப்படுத்தப்படுபவதாகவும் உணரும் பெண்கள் வசந்தி பாத்திரத்தில் தங்களை அடையாளம் காண்பது இப்படத்தின் வெற்றி. மற்றவர்களுக்கு இது ஒரு தமிழ்த் தொலைக்காட்சித் தொடர் மட்டும்தான்.


TUTORING

KEEN TUTORING CENTRE

By Qualified & Experienced Tutors

- CHEMISTRY, PHYSICS, BIOLOGY
- FUNCTIONS, ADV. FUNCTIONS
- CALCULUS & VECTORS, DATA MGT
- SCIENCE, MATH, ENGLISH

GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"

Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு

- ✓ High School ACADEMIC/UNIVERSITY
- ✓ IB & AP PROGRAMME
- ✓ M CAT Classes
- ✓ EQAO GR 3 & 6

www.vlambaram.com
www.tamilvanakkam.com

Computek College
BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY
Registered as a private career college under the Private Career Colleges Act, 2005

Enroll in a Diploma Course and receive a FREE Laptop
(Offer valid until March 31st- Some conditions apply)




Markham Campus Students receiving Free Laptops



Scarborough Campus Students receiving Free Laptops



Toronto Campus Students receiving Free Laptops

CCNA
Saturday March 21st

CompTIA A+
Tuesday March 24th

Food Handler Exam
Saturday March 28th

Computer Repair & Assembly for Highschool Students
March 25th

Call NOW to Register! 416.321.9911

DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Network Engineering | 35 wks |
| Personal Support Worker | 32 wks |
| Medical Office Admin | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

PART-TIME COURSES* (WEEKEND /EVENING)

Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

* These programs do not require approval under the Private Career Colleges Act, 2005

WWW.COMPUTEK.EDU

Financial assistance may be available for those who qualify

Toronto Campus
301-2347, Kennedy Rd.
(Kennedy/Sheppard)
416-321-9911

Markham Campus
202 - 7 Eastvale Drive,
(Markham / Steeles)
905-471-3344

Scarborough Campus
248-2390 Eglinton Ave E
Kennedy/Eglinton)
416-285-9941

# 'விளம்பரம்'...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

நா.சுப்பிரமணிய ஐயர் மற்றும் கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியம் இருந்தார்கள்.

கட்டுரைப் போட்டியின் மூன்றாம் பரிசு சென்னை, தமிழ் நாட்டைச் சேர்ந்த த.வெ. மணிமாறன் 'கலையும் பண்பாடும்' என்று கொடுக்கப்பட்ட தலைப்பில் எழுதிய கட்டுரைக்கு கிடைத்தது. இதற்கான 200 டொலர் பணப்பரிசை Gnanams Studio மற்றும் Kathir Homes என்பவற்றின் உரிமையாளர் கதிர் சுப்பிரமணியம் வழங்கினார்.

இரண்டாம் பரிசு அறந்தாங்கி, தமிழ் நாட்டைச் சேர்ந்த அறந்தை வ.முத்துவேல் 'மருத்துவமும் தமிழரும்' என்று கொடுக்கப்பட்ட தலைப்பில் எழுதிய கட்டுரைக்கு கிடைத்தது. இதற்கான 300 டொலர் பணப்பரிசை Homelife GTA RealityIr; சேர்ந்த S.ரமணன் வழங்கினார்.

முதலாம் பரிசு சென்னை, தமிழ் நாட்டைச் சேர்ந்த R.லட்சுமணன் 'கலையும் பண்பாடும்' என்று கொடுக்கப்பட்ட தலைப்பில் எழுதிய கட்டுரைக்கு கிடைத்தது. இதற்கான 500 டொலர் பணப்பரிசை Mortgage Consultantsஆன தாஸ் முருகதாஸ் வழங்கினார்.

கட்டுரைப் போட்டியின் முடிவுகள் நடைபெற்ற பின்னர் நடந்த சில நிகழ்வுகளின் பின்னர் விளம்பரத்தின் 25ஆவது ஆண்டையொட்டி நடத்தப்பட்ட உலகளாவிய போட்டிகளில் நான்காவதான குறுநாவல் போட்டியின் முடிவுகளை அப்போட்டியின் நடுவர்களில் ஒருவரான நாமகள் சிவகுமார் அறிவித்தார்.



இப்போட்டியின் வெற்றியாளர்களை தெரிவுசெய்யும் நடுவர்களாக நாமகள் சிவகுமாருடன் அ.முத்துலிங்கம், கலாநிதி மைதிலி தயாநிதி, இ. மகேந்திரன் இருந்தார்கள்.

குறுநாவல் போட்டியின் மூன்றாம் பரிசு மார்க்கம், கனடாவைச் சேர்ந்த சோ. ராமேஸ்வரன் எழுதிய 'கனடாவில் ஒரு யாழ்ப்பாணம்' இற்கு கிடைத்தது. இதற்கான 300 டொலர் பணப்பரிசை Insurance Brokerஆன சிவ பஞ்சலிங்கம் வழங்கினார்.

இரண்டாம் பரிசு திருச்சி, தமிழ் நாட்டைச் சேர்ந்த S. செல்வசுந்தரி எழுதிய 'உன்னை விட்டு விலகுவதில்லை' இற்கு கிடைத்தது. இதற்கான 500 டொலர் பணப்பரிசை Homelife GTA Reality நிறுவன உரிமையாளர்களில் ஒருவரான ராஜா மகேந்திரன் வழங்கினார்.

முதலாம் பரிசு கெஸ்விக், கனடாவைச் சேர்ந்த நிலானி சுதன் எழுதிய 'வானவில்' இற்கு கிடைத்தது. இதற்கான 1,000 டொலர் பணப்பரிசை Niru Brand உரிமையாளர் தேவகுமார் தம்பதியினர் வழங்கினர்.

இங்கு வழங்கப்பட்ட பரிசுகளில் பலவற்றை வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் பெற்றுள்ளதால் அவர்களது பரிசுத்தொகை காலக்கிரமத்தில் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என நிகழ்ச்சித் தொகுப்பாளர் S.கணேஷ் தெரிவித்தார்.

போட்டி முடிவுகளின் இடையே சிறப்பு விருந்தினர் கலாநிதி கவிஞர் உ.சேரனின் உரை நடைபெற்றது. அவர் தனது உரையில் தமிழ் ஊடகத்துறையைப் பொறுத்தவரையில் மொழியின் சிதைவும், தனித்துவம் இன்மையும், பொய்மையும், திருட்டும், அறிவின் வீச்சின்மையும் பெரு நோய்களாக இருப்பதைக் காண முடிகின்றது என்றார். இதற்கு உதாரணமாக 'விஜயம் செய்தார்' என்ற தொடர் மன்னர்களும், பிரபுக்களும் விஜயம் செய்வதைக் குறித்தது. இப்போது எமது ஊடகங்களில் 'மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புகள் மேலதிக ஆய்வுக்காக அமெரிக்கா விஜயம்' என குறிப்பிடும் அளவுக்கு வந்துள்ளது என்றார். இதுபோலவே 'ராஜிநாமா', 'ஆஜர்', 'ஊர்ஜிதம்', 'வாபஸ்', 'ஜாமீன்', 'பந்தோபஸ்து', 'ரகளை' போன்ற சொற்களும் மிகவும் தாராளமாக நமது ஊடகத்துறையில் பயன்படுத்தப்படுகிறது என்றார். பணிவிலக்கம், பணிநீக்கம், பணிதுறப்பு, உறுதிப்படுத்தல், பின்வாங்குதல், மீளப்பெற்றுக்கொள்ளல், பிணை, பாதுகாப்பு போன்ற தெளிவான எளிமையான நல்ல மொழிப் பயன்பாடு இருக்கும்போது எமது ஊடகத்துறை ஏன் கனியிருக்க காய் கவருகிறது என்று வினாவினார்.

விளம்பரத்தில் வரும் கட்டுரைகள், அதை எழுதுபவர்கள் அது காலம் தவறாது வருவது பற்றி நகைச்சுவையுடன் விளம்பரத்தில் பல காலமாக எழுதிவரும் கலகலப்பு தீசன் உரையாற்றினார். விளம்பரத்தில் ஆரணி எழுதிவரும் சிறுகதைகளை அம்புலிமாமாவில் வரும் கதைகளுடன் ஒப்பிட்டார்.

விளம்பரத்தின் வெள்ளி விழாவின் பிரதம விருந்தினரை அறிமுகப்படுத்திய சிவ ஞானநாயகன், கலாநிதி சுதர்சனன் சுப்பிரமணிய ஐயர் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் சிறப்பு பட்டதாரியும் அமெரிக்காவில் கலாநிதி பட்டம் பெற்று தற்போது Nintendo

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

# ஜெயமோகனின்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

கண்ணகி கதையை எத்தனை முறை எழுதிப் பார்த்தாலும் புதுமை மிளிரும். புரட்சி வெடிக்கும். தமிழ்ப் பெண்ணிய அழகியலின்




அற்புத ஆற்றல் இது எனலாம். கொற்றவையில் முன்னிலை பெறும் தொல் மாதிரிகளும் தொன்ம வடிவங்களும் அடிப்படையான பண்பாட்டுத் தகவலை நம் முன் படைக்கின்றன. மக்கள் பண்பாட்டையும் அவர்களின் உலகப் பார்வையையும் கதைகளாகப் பின்னுகிறது. பண்பாட்டின் அடிப்படை அம்சங்கள் மறு அடையாளம் காணப்பட்டுள்ளன. வரலாற்றை எழுதுவது என்பது மக்களின் கதையை அவர்களின் சொந்தச் சொற்களாலும் உருவங்களாலும் விவரிப்பது. கொற்றவை தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கிய அடிப்படைச் சிக்கல்களையும் வெற்றி தோல்விகளையும் நம் கவனத்திற்கு கொண்டு வருகிறது. பண்பாட்டின் முதன்மையான அம்சங்கள் குறியீட்டியியல் அடிப்படையில் வாழ்வியல் இலக்கியத்திலும் நிறுவப்படுவதையும் எடுத்துரைக்கிறது.

தமிழ்ப் பண்பாட்டின் பன்முக அர்த்தங்களையும், தேடல்களையும் கொற்றவை நமக்கு நினைவுபடுத்துகிறது. பண்பாட்டை உரையாடலாகவும் உற்பத்தியாகவும் செயல்பாடாகவும் விளக்குவதில் கொற்றவை வெற்றி பெற்றுள்ளது. கண்ணையன்னை மறுவாசிப்பு தமிழ்ச் சமூக மறுவாசிப்பாக விரிவடைய வேண்டும். பழையன கொல்லும் கொற்றவை முடிவற்ற மாற்றங்களின் தோற்றமாகவும் விளங்குவதை வெளிக் கொணர்ந்துள்ளார் ஜெயமோகன் என்பதால் நம் அனைவரின் முதன்மைக் கவனத்தையும் பெறுகிறார்.



# ஓ காதல் கண்மணி (OK கண்மணி) - விமர்சனம்

அவளுடைய பெயர் தாரா. அவள் கட்டிடக்கலை படித்து வேலை செய்கிறாள். Parisஇற்கு சென்று, மேற்படிப்பை முடிப்பது தான் அவளுடைய இலட்சியம். தனது தந்தையும் தாயும் சிறு வயதில் பிரிந்ததால் அவளுக்கு கல்யாணத்தில் நம்பிக்கை யில்லை. அத்தோடு கல்யாணம் கட்டினால் அவளால் சாதிக்க முடியாது எனவும் நினைக்கிறாள்.

அவனுடைய பெயர் ஆதி. அவன் video game designerஆக இருக்கிறான். புது வேலைக்காக மும்பாய் வந்து, தன் அண்ணனுக்கு தெரிந்த ஒருவருடன் வாழ்கிறான். US சென்று பணக்காரன் ஆவது அவனுடைய இலட்சியமாகும். கல்யாணம் இதற்கு ஒரு இடையூறு என நினைத்து அதில் அவனுக்கு நம்பிக்கை இல்லை.

இவர்கள் இருவரும் கதாநாயகனும், கதாநாயகியும் ஆயிற்றே! இருவரும் சந்தித்து பழகுகின்றனர். ஆனால் அதற்குப் பின்னர் அவர்களுக்கு என்ன நடக்கப்போகிறது? கல்யாணம் விரும்பாதவர்கள், இலட்சியம் உள்ளவர்கள், ஏன் திருமணம் செய்ய வேண்டும்? கல்யாணம் செய்யாமல் சேர்ந்து வாழ்வது தப்பு ஆகுமா? இக்கேள்விகளுக்கு மணிரத்தினம் தன் படத்தில் அழகாக பதில் அளிக்கிறார். இன்னும் இந்த படத்தை பார்க்காமல் இருந்தால் உடனே பார்த்து விடையை அறியுங்கள்.

இப்போது நான் கண்ட விடைகளைப் பற்றி கூறப்போகிறேன்.



முதலில் ஒன்று கூற வேண்டும். சாதிக்கக்கூடிய, நியாயமான இலட்சியமுடன் திரிகின்ற கதாநாயகியை ஒரு தமிழ் படத்தில் காண்பது நன்றாக இருந்தது. கதாநாயகிக்கும் கதாநாயகன் போல ஓர் ஆழமான பின்கதை இப்படத்தில் இருந்தது.

இப்போது, "அட, இப்படத்தில் கல்யாணம் செய்யாமல் சேர்ந்து இருத்தலை (living together) ஊக்குவிக்கின்றார்கள், இது நன்றல்ல" என ஐயம் உடையவர்களும், "ஆகா அப்படியானால் living together கூடாது என்றா சொல்கிறார்கள்" என பயப்படுகின்றவர்களும் அஞ்சத் தேவையே இல்லை. இப்படத்தின் கதாநாயகர்கள் இருவரும் வெளி ஆட்களின் கட்டாயப் படுத்தல் இல்லாமல், தாங்களே ஒரு முடிவிற்கு வருகின்றனர்.

அதனால் படத்தில் வெளியாட்களின் வற்புறுத்தல் இல்லை என்று கூற முடியாது. வழமையான மசாலா படங்களில் குடும்பத்தி னருக்கு கதாநாயகர்கள் காதலித்து கல்யாணம் செய்வதில் விருப்பம் இல்லாமல் இருக்கும். ஆனால் இப்படத்தில் குடும்பத்தினர் ஆதியையும், தாராவையும் திருமணம் செய்ய வலியுறுத்துகிறார்கள்.

ஆகவே OK கண்மணி இலட்சியம் - திருமணம் - சமூகம் ஆகிய மூன்றையும் பற்றி சிந்திக்கிறது.

தாரா-ஆதி சமூகத்தினரால் கீழாக பார்க்கப்படுகிறவர்கள் என்றால், கணபதி-பவானி ஆகிய ஆதி இருக்கும் வீட்டு சொந்தக்காரர்கள் கல்யாணத்தின் முன் உதாரணமாக இருக்கின்றார்கள். Alzheimer's வருத்தம் உடைய பவானியை எப்படி அவரின் கணவன் கணபதி பார்க்கிறார் என கதாநாயகர்கள் கண்டவுடன் அவர்கள் மறு பக்கத்தில் இருந்து தமது வாழ்க்கையை யோசிக்க ஆரம்பிக்கின்றனர்.

இறுதியாக என்ன கூற முடியும் என்றால், கதையின் தொடக்கம் முதல் கடைசி வரை கதாநாயகர்களின் இலட்சியங்களோ, நம்பிக்கைகளோ மாறவேயில்லை. அவர்களுடைய அனுபவங்களும், பார்க்கிற பார்வையும் தான் (perspective) மாறுகின்றன. எனவே அவர்கள் படத்தில் உண்மையாகவே வாழுகிறார்கள்.

இதனால் பார்வையாளர்களுக்கு போதனை (lecture) செய்யாமல் படத்தின் கருத்து உணர்த்தப்படுகிறது. எனவே OK கண்மணி பார்ப்பவர்கள் படத்தை முடிவு வரை (credits இல் வரும் animation முடியும் வரை!) பார்க்க வேண்டும். ஏன்னெனில் அப்போதுதான் உங்கள் கேள்விகளுக்கு விடை கிடைக்கும்



**ஞா. ஆரணி**
**அகவை 16**


## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

**TUTORIAL 300 A**

**ANSWERS TO TUTORIAL 298(NO2)&TUTORIAL 299**

**298 NO2**




**Y=16-X²**, Area of rectangle =2xy .Therefore y=2x(16-x²) =32x-2x³


$Y=16-X^2$, Area of rectangle $=2xy$. Therefore $y=2x(16-x^2)=32x-2x^3$

Differentiating $y'=32-6x^2$ for max. $32-6x^2=0$, so $x=\sqrt{\frac{32}{6}}=2.309$

2x=4.6 length of rectangle , so $y=16-2.309^2=10.7$

**Answers to tutorial 299**

1)




$300=3x+4y$

$Y=\frac{300-3x}{4}$

$A=2YX=2(\frac{300-3X}{4})\,x=150x-1.5x^2$

For max area $A'=150-3X=0$, so $x=50$, $y=\frac{300-150}{4}$, so $2y=75$, so dimensions are 50 &75 metres

2) $y=3x+5$, to find f'x , $x=3y+5$. $y=\frac{x-5}{3}$ so $(f_0f')=f(\frac{x-5}{3})=3\left(\frac{x-5}{3}\right)+5$

$(f_0f')=x-5+5=x$

3) $A=4(3)^{20}=14$ BILLION

4) it is an exponential

TUTORIAL **300** Questions

1)Wh en 62 is divided by a certain number ,the quotient is 7 and the remainder 6.What is the number?(for gr 6&7)

2)A perfect number is a number which equals the sum of its proper divisers .For example 6=1+2+3 ,what is the next perfect number?(for grade 9)

3)Determine the point on the curve $y=\sqrt{\frac{2(x+2)}{3}}$ that is closest to the origin ?( for gr 10 to 12)

4)Find the vector projection of $\vec{u}=(5,6,-3)$ onto $\vec{v}=(1,4,5)$ (for gr 12)

5)If a monkey typed four strokes on key board and each stroke was a different letter,what is the probability that the monkey typed 'MATH'(for gr 12)

By Mr s.f.Xavier(Teacher)

tel

6473409490/4167322228



# EDUCATION

## Review Questions15 -11

➢ CHEMISTRY 12

Synthesize the following compounds from 1-propanol.

(i)Propene (ii) Propanal (iii) proponoic acid
(iv)2- proponol (v) 2- bromopropane
(vi) Propanone

➢ CALCULUS

Find the limits $\lim_{x\to 0}\frac{ax^2+bx+c}{cx^2+bx+a}$

(ii) $\lim_{h\to -4}\left(\frac{\frac{1}{4}+\frac{1}{h}}{4+h}\right)$ (iii) $\lim_{x\to 1}\frac{x^6-1}{x^{10}-1}$

(iv) $\lim_{x\to 2}\frac{x+2}{x^3+8}$

(v) $\lim_{x\to -3}\left(\frac{3x^3-4x+3x^2-12}{x^2-9}\right)$

(A) Differentiate the following,

(I) $y=\cos^2\frac{1}{x}$

(II) $y=\cos^{-1}\left(\frac{3+5\cos x}{5+3\cos x}\right)$

(III) $y=3-\beta^2\cos\beta$

## Answer Key : 15-10

CHEMISTRY 12

(i)2,4-dimethyl-1-phenylheptan-1-one

(ii)*Boiling points:*

2,4-dimethyl pentane< n- heptane <2- hexanone <1- hexanol

*Molecular size :*

2,4-dimethyl pentane < n- heptane

Greater London dispersion force in n-heptane .

2- hexanone is having dipole –dipole attraction in addition to London dispersion forces.

1- hexanol is having hydrogen bond due to the presence of hydroxyl group.

CHEMISTRY IB & GR 12

(1) (a) Rate = k $[NO]^1 [Cl_2]^1$


(b) $3.8 \times 10^{-2}$ $mol^{-1}Ls^{-1}$

(ii) $\Delta H$= -77.1kJ

(ii) $\Delta S^{\Theta}$ = -121.3J

(iii) increasing temperature do not affect the spontaneity of the reaction.

PHYSICS 11




(i) $\sum F_y = F_T + F_T - F_g = ma$

$2F_T - F_g = 0$

$F_T = \frac{F_g}{2} = \frac{72 X 9.8}{2} N$

$F_T$ = 350N

(ii) $2F_T - F_g = ma$

$F_T = \frac{ma+F_g}{2}$

$F_T = \frac{72X1 + 72X9.8}{2}$

PHYSICS 12

Question : A thin film coated on....

Ans: L = λ/ 4 $n_2$ = 99.6 nm

CALCULUS 12

(i)Find the equation of the tangent line to the function $f(x) = \ln\left(\frac{x^2}{x^2+1}\right)$ at $x=1$

(i) Differentiate the following,

(i) $\sqrt{\frac{1+x^3}{1-x^3}}$ (ii) $\sqrt{1+x^2}.\sin^3\sqrt{x}$

ADV. FUNCTIONS 12

$\log_a x - (\log_a y^3)$

$= \log_a x - 3(\log_a y) = 11$

CALCULUS 12

$f(x) = \ln\left(\frac{x^2}{x^2+1}\right)$ at $x=1$

Ans : tangent line Y + ln 2 = 1(X -1)


Ans. key 15-11 - next issue
☎ 647 341 3975
K.A.Srikrishnaraj PhD
ask@ keentutoringcentre.com
KEEN TUTORING CENTRE


# 'விளம்பரம்'....

Systemஇல் Head of Architectureஆக Seattle, அமெரிக்கவில் பணிபுரிகிறார் என்றார். கலாநிதி சுதர்சனன்








30இற்கு மேற்பட்ட கணினி சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப பயன்பாடுகளுக்கு அமெரிக்க மற்றும் சர்வதேச காப்புரிமையை கொண்டிருப்பதோடு 60இற்கு மேற்பட்ட தொழில்நுட்ப வெளியீடுகளையும் வெளியிட்டுள்ளார் என்றார். கிங்ஸ்ரனில் உள்ள Queens பல்கலைக்கழகத்திலும் ஏழு ஆண்டுகள் இணை பேராசிரியராக இருந்தவர். பொருளாதாரத்தில் மிகுந்த ஈடுபாடுடைய சுதர்சனின் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட கட்டுரைகள் உலக தமிழோசையிலும் வெளிவந்தது என்றார்.

கலாநிதி சுதர்சனன் தனது பிரதம விருந்தினர் உரையில் சமமின்மையை (inequality) பற்றி விளக்கினார். தமிழ் எழுத்தாளர்களும், தமிழ் ஊடகங்களும் இது பற்றி எழுத வேண்டும் என்பதே தனது அவா என்றார். உலகின் பெரும் செல்வங்கள் எல்லாம் ஒரு சிலரிடமே இருக்கின்றன என்பதை எடுத்துகாட்டிய சுதர்சனன் சமமின்மையை எவ்வாறு கணிப்பது என்பதையும் விளக்கினார். சமமின்மை இருப்பது நல்லதா அல்லது சமமின்மை ஒழிந்து 'சமம்' வரவேண்டுமா என்பது பற்றிய இரு பக்க நியாயங்களையும் எடுத்து விளக்கிய சுதர்சனன் தான் இதில் எது சரி என்றோ, எது பிழை என்றோறு கூறவரவில்லை. ஆனால் தமிழ் மக்கள் இது பற்றிய இரு பக்க நியாயங்களையும் அறிந்திருக்க வேண்டும் என்றார். சுதர்சனன் இது பற்றி சபையில் இருந்த எழுத்தாளர்களையும், ஊடகவியலாளர்களையும் எழுதுமாறு கேட்டுக்கொண்டார். இவ்விழாவில் விளம்பரத்தின் வெள்ளிவிழாவை கொண்டாடுமுகமாக 'அடுத்த காலடி' என்னும் நூல் வெளியிடப்பட்டது. இந்நூல் பற்றி ரதன் அறிமுக உரையாற்றினார்.

'அடுத்த காலடி'யை விளம்பரம் பதிப்பாளர் ராஜா மகேந்திரன் வெளியிட்டு வைத்தார். அதன் முதல் இரண்டு பிரதிகளையும் திருமதி பரமேஸ்வரி சபாரத்தினமும், திருமதி புவனேஸ்வரி ஐயாத்துரையும் பெற்றுக்கொண்டனர். போட்டிகளின் முடிகள் அறிவிக்கும் பொழுது இடையிடையே விளம்பர எழுத்தாளர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விழா நடைபெற்ற மண்டபத்தினைப்பற்றிக் கூறுவதெனில் அங்கு ஒலி அமைப்பு ஆரம்பத்தில் சிறிது தடங்கல்களைக் கொடுத்தது. நிகழ்வுகளைத் திரையில் காண்பதற்கு உரிய ஒளி அமைப்பு சரியாக வேலை செய்யவில்லை. சிசமயங்களில் மண்டப அலுவலகர்களது உரையாடல்கள் சிலருக்கு நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு தடங்கலாக இருந்தன. இவ்வாறன சில தவறுகளைவிட மண்டபம் இந்நிகழ்வுக்கு அளவானதாகவும் மிகவும் நல்ல முறையிலும் அலங்கரிக்கப்பட்டும் இருந்தது.

விளம்பரத்தின் வெள்ளிவிழாவின் நிறைவாக ராஜா மகேந்திரன் நன்றியுரை நிகழ்த்தினார். விளம்பரத்தின் வெள்ளிவிழா இரவு உணவுடன் மாலை 9 மணி அளவில் நிறைவு பெற்றது.



அருந்ததி ஞா.

# பத்திரகாளி சோதிட நிலையம்

# BADRAKALLI ASTROLOGY CENTER




## Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

# 416.846.2798

## 100% Guaranteed Result



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

- Business Investments
- Jealousy
- Childless Couples
- Depression
- Worries About Loved Ones
- Enemy Problems
- Money Problems
- Sexual Problems
- Love Problems
- House Protection
- Work Problems
- Money Blessing
- Family Arguments
- Drinking Problems

பிளெக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2**

**GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)**

நகைச்சுவைத் தொடர் 311

# ராசம்மா ராச்சியம்


கலகலப்பு தீசன்



உலகை கடவுள் எப்படி ஆட்டிப் படைக்கிறான் பாத்தியளே என எழுத்தோட்டம் இல்லாத படம் ஓடுவது போல ஆரம்பித்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா. விவசாய புரட்சி ஒருபுறம், வெயிலின் வரட்சி மறுபுறம்.



அமெரிக்காவிலை போன கிழமை புயலும் சூறாவளியும் ரெக்சஸ் என்ற இடத்திலை பலர் இறந்துள்ளனர். இந்தியாவிலை தாங்கமுடியாத வெயில், பலர் இறந்துள்ளனர்.
'நான் அசைந்தால் அசையும் உலகமெல்லாமே அறிவாய் மனிதா உன் ஆணவம் பெரிதா' பாடல் ஞாபகம் வருகிறது.



இதுவரை காலமும் உலகருடனோ அல்லது ஆட்டிலறி அன்னம்மா குழுவுடனோ கதைக்காத ரூபன் சொன்னான், சர்வதேச கால்பந்து அமைப்பில் பணமோசடி. (எமது பாசையில் சொல்வதென்றால் பந்தை அடிப்பதற்கு பதிலாக காசை அடித்திருக்கிறார்கள்)




சுவிற்சலாந்தில் அந்த அமைப்பிலுள்ள 6 பேர் அடுத்தடுத்த உலக கால்பந்தாட்டப் போட்டிகள் 2018இல் ரஸ்யாவிலும் 2022இல் கட்டாரில் நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் குளறுபடியும் இலஞ்ச ஊழலும் தாராளமாக நடந்துள்ளது. 65ஆவது மாநாடு அடுத்த நிர்வாகம், தலைவர் தெரிவு செய்ய இருந்த இறுதி நேரத்தில் பொலீசார் இவர்களை கைது செய்தனர்.

இஞ்சி, இடியப்பம், இலுப்பெண்ணை வியாபாரம் எங்கை பாத்தாலும்...
ஆட்டிலறி அன்னம்மா 50 மில்லியன், லொட்டோ 649 றிசல்ற் பார்ப்பது போல, கண்ணை ஐ பொட்டின் உள்ளே தலையை விட்டு வாசித்தா. ராஜபக்ச பவரிலை இருக்கேக்குள்ளை பொதுநல நாடுகள் மகாநாட்டுக்கு கொழும்பு வீதிகளில் திரியும் நாய்களை அப்புறப்படுத்தி அவற்றை பாதுகாப்பாக வைத்து சாப்பாடு போட்ட செலவு 10 லட்சம். அது சரி நாய்களை காட்டி கணக்கு காட்டலாம் என்றால் நாய்களையும் காணவில்லை, 10 இலட்சத்தையும் காணவில்லை.



தனது கிணற்றை காணவில்லையென்று வடிவேலு ஒரு படத்தில் வழக்கு போடுவார். இன்னொரு படத்தில் மறைந்த நகைச்சுவை நடிகர் தங்கவேலு முதலாளிக்கு கணக்கு காட்டும்போது யானைக்கு அல்வா கொடுத்த கணக்குப்போல...
எல்லோருக்கும் அல்வா கொடுக்கும் கதைதான் இது.
'நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு'



உலகண்ணை, "ராஜபக்சாவை லெக்சன் கேட்க விடமாட்டாராம் மைத்திரி" என தான் பேப்பரில் வாசித்த செய்தியை செக்கண்ட் புளோர் செல்லம்மா உலகரிடம் சொல்ல...
என்னெண்டு விடுவார் எனப் பாய்ந்தா ஆட்டிலறி அன்னம்மா.

'தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்' என்பார்கள்.
ஏன் கூட இருந்தே குழி பறிப்பதென்பார்கள்.



இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை சுடுவதற்கு துப்பாக்கியுடன் ராஜபக்ச ஆளை அனுப்பியதாக கைதும் விசாரணையும் நடந்து கொண்டிருக்கும் வேளையில் அவர் சொன்னது தான் சரியென காரமாகச் சொன்னா ஆட்டிலறி அன்னம்மா.

உலகண்ணை சிங்கம் படத்திலை சூரியாவைப் பாத்து விஜயகுமார் "கேட்பார், இவ்வளவு நாளும் எங்கே..ஐயா..இருந்தாய்''. அதுபோலத்தான் இருக்கிறது புதிய ஜனாதிபதி மைத்திரிபாலாவின் செயல்கள் புங்குடுதீவு பாடசாலை மாணவியின் வழக்கு தொடர்பாக. அமளி துமளியின்றி திடீரென யாழ். விடயம் செய்து வித்தியாவின் பெற்றோரைச் சந்தித்து பாடசாலை மாணவர்களையும் சந்தித்து சென்றுள்ளார்.

ஒரு கையில் ஐ பொட்டும் மறுகையில் விளம்பரம் 25வது வெள்ளி விழாவில் வெளியிட்ட 'அடுத்த காலடி' சிறப்பு மலரை வாசித்துக் கொண்டிருந்தா.




எம் மனதைவிட்டகலாத மறைந்த அதிபர் பொ. கனகசபாபதி ஆசிரியரின் சூரியகாந்தி பற்றிய கட்டுரை 'அதுவே விதைத்து அறுவடை செய்துகொண்டு போட்டுது' என்ற கட்டுரையை வாசித்து ஆட்டிலறி அன்னம்மாவிற்கும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவிற்கும் காட்டிக்கொண்டிருந்தா.

'அடுத்த காலடி'யை மேலோட்டமாக பார்வையிட்டா ஆட்டிலறி அன்னம்மா.
புலம் பெயர்ந்த தமிழரின் வருகை, அலைச்சல், மக்கள் பட்ட கஸ்டம், தொடர்பு சாதனங்கள் ஆரம்பித்தது, அதனை தொடர்ந்து நடத்தும் கஸ்டம் என சேகரிக்கப்பட்ட 2002இல் வெளிவந்த புள்ளிவிபரங்களுடன் விளம்பரத்தை ஆரம்பித்த ராஜா மகேந்திரன் பல விபரங்களுடன் "கடந்து வந்த பாதையும் ....அடுத்த காலடியும்" என்ற கட்டுரை ஆட்டிலறி அன்னம்மாவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. 21க்கும் மேற்பட்ட பத்திரிகைகள் (சில தொடர்ந்து வருவதில்லை) விளம்பரம் ஆரம்பத்தில் அச்சிட்ட ஆரம்ப தமிழ் அச்சகமான மறைந்த ஈழத்துப்பூரடனார் றிப்ளக்ஸ் அச்சகம்.



வானொலி, தொலைக்காட்சிகள் பற்றிய விபரங்கள் அடேயப்பா! எமக்கு எம்மைச்சுற்றியுள்ள எத்தனை விடயங்கள் தெரியாமல் இருக்கின்றன. விளம்பரம் பத்திரிகையின் 25ஆவது வெள்ளி விழாவும், எழுத்தாளர் கௌரவமும், திட்டமிட்ட சிறப்பான வெள்ளிவிழா. தொடரட்டும் விளம்பரம்.

ஜூன் 01 - 14, 2015 ஞாபகம் வருகிறதா



2. சர்வதேச குழந்தைகள் தினம்

2. 1766. ப.கந்தப்பிள்ளை (ஆறுமுகநாவலரின் தந்தை) பிறந்தநாள் புலவர் ஆராச்சிக் கந்தர்.



3. பண்டிதர் தா. முருகேசுபிள்ளை நினைவுநாள்.


4. பூமாலை நடவடிக்கை. அனுமதியின்றி இந்திய விமானங்கள் இலங்கை வான்பரப்பில் உணவுப்பொதிகளை வீசிய தினம். (அனுமதியுடன் வந்து குண்டுகள் வீசியது பிற்காலம்)



5. இலங்கை நாடாளுமன்றத்தில் 'சிங்களம் மட்டும் சட்டம்' 1956 யூன் 5 நிறவேற்றப்பட்டது.

5. உரும்பிராய் பொன் சிவகுமாரன் 1974இல் பொலீஸ் சுற்றிவளைப்பின் போது சயனைட் அருந்தி தன் இன்னுயிரை மாய்த்த தினம்.

5. மறைந்த இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி சீக்கியர்களின் பொற்கோவிலை தாக்க உத்தரவிட்ட தினம். (படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்)



5. உலக சுற்றுச்சூழல் நாள்.

5. மு.சிவசிதம்பரம் நினைவுதினம். (2002) தமிழர் கூட்டணித்தலைவர்.

6. 1930 - இலங்கையில் வீரகேசரி நாளிதழ் தொடங்கப்பட்டது.

6. கனடாவின் முதல் பிரதமர் சேர். ஜோன் மக்டொனால்ட் நினைவு தினம். (11 ஜனவரி 1878 - 6 ஜுன் 1891)



7. உலகக்கடல் நாள்.

11. ஈழத்துப்புலவர் சோ. இளமுருகனார் (நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன். (1975) (ஈழத்து சிதம்பர புராணத்தை எழுதியவர்)




12. உலகக் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புதினம்.

14. சர்வதேச இரத்த வழங்கல் நாள்.

14. ஈழத்துப் பெரியார் தென் புலோலியூர் கந்தமுருகேசனார் நினைவுதினம். (1902-1965)
(வறுமையின் காரணமாக கல்வியைத் தொடர முடியாமலும் 25 வயதில் கால்கள் வலுவிழந்தாலும் வீட்டையே திண்ணைப் பள்ளிக்கூடமாக்கி பலருக்கு கல்வி போதித்தவர்)

15. ஆன்மீகவாதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுதினம். (1925 - 2008)




உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND
Niru BRAND
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
Niru BRAND
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# LAW OFFICE

## STEFANO FORTINI

B.A., LL.B., Barrister & Solicitor


*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

# Computer Repairs! Computer Repairs!

- *Computer & Laptop Sales*
- *Software & Antivirus*
- *Virus Removal*
- *All types of Computer Repairs*
- *Computer Upgrades*

**We Also Sale Mobile Phones**



**Ganesh: 416.527.1455**

venuscomputer50@gmail.com
umaaganesh@yahoo.com

For Computer Repairs, Upgrading & Virus Removal

**Sales Reps. Welcome**

**Raja M. Mahendran,** P. Eng.

(Broker / Owner)



*For All your Real Estate & Investments Needs!*

**HomeLife/GTA Realty Inc.** Brokerage *

5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: **416.321.6969**

* INDEPENDENTLY OWNED AND OPERATED

# நூல் அறிமுகம் - சரசோதிமாலை

ஒரு சமூகப் பண்பாட்டு பார்வை பாகம்-1

முனைவர் பால. சிவகடாட்சம்

வெளியீடு: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை, தமிழ்நாடு
(தென்னிலங்கையில் ஆட்சிபுரிந்த பண்டித பராக்கிரமபாகு பூபன் என்னும் அரசனின் காலத்தில் போசராசன் எனப்பெயரிய பண்டிதரால் இயற்றப்பட்ட அருந்தமிழ் காலக்கணித இலக்கியம் - ஈழத் தமிழ் அறிஞர்களின் ஆற்றலைப் பறைசாற்றும் நூல்)
சரசோதிமாலை எனும் காலக்கணிதம் (கி.பி. 1310) பாகம்-2

பதிப்பாசிரியர்: முனைவர் பால. சிவகடாட்சம், முனைவர் கோ. விசயராகவன், முனைவர் ஆ.தசரதன்

வெளியீடு: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை, தமிழ்நாடு

காலம்: 2015 ஜுன் மாதம், திகதி, சனிக்கிழமை, பிற்பகல் 5:30- 8:00 மணிவரை
June 6, 2015 Saturday from 5:30 PM to8:00 PM

இடம்: பவதாரிணி கலைக்கோவில் மண்டபம் (சந்திரமௌலீசர் கோயில், நீலகிரி அருகில்)
Bhavatharani Bharathi Kalaikovil Academy of Fine Arts
3001 Markham Road, Scarborough, ON M1X1L6




# வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் ஆக வேண்டுமா?

வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களில் அறிவிப்பாளராக விரும்புகின்றீர்களா? அதற்கான பயிற்சி நெறிகளை அனுபவம் வாய்ந்தவர்களிடம் மூன்றே மாதங்களில் கற்றுத்தேர்ந்திட அழையுங்கள்...

**Weekly (x12) Intensive Classes Starts in June 23, 2015**

**Ajanthan: (647) 303-6964**







Relocation Services
Ottawa<<<<>>>>>GTA

**கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது!**

**கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்**

# BUY. SELL. INVEST

விளம்பரம்
VLAMBARAM

# விளம்பரம் 25ம் ஆண்டு விழா

விளம்பரம் 25ஆம் ஆண்டின் விழா சிறப்பாக மே 24, 2015 அன்று ஸ்காபரோவில் உள்ள Queen Banquet Hallஇல் நடைபெற்றது. எழுத்தாளர்கள், அவர்களின் குடும்பம், ஊடகவியலாளர்கள், 25ஆவது ஆண்டின் நிகழ்வாக போட்டியில் கலந்து கொண்டவர்கள், வெற்றி பெற்றவர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்வை சிறப்பித்தார்கள். இந்த நிகழ்விலிருந்து சில...

















"Let me help you make the right choice"

SchurenSriskandarajah B.A.
Sales Representative

HomeLife/Future Realty Inc., Brokerage
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8



SCHUREN.CA • 416.333.9393

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca

HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962



GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!™

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

List Buy Sell

RE/MAX All Stars Realty Inc., Brokerage


Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com



வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*

"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.



Allstate
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N



THE TRUSTED MORTGAGE AGENT
"Solution For Every Mortgage"
Mortgage Alliance The Guardian
*Some Terms & Conditions May Apply



•I will arrange your 1st Mortgage with 0% down.
•Need a 2nd Mortgage???
"When banks say no We say yes"
@ interest rate starting from 6.99%+.



Surren Selvanayagam
(LIC: M14001034)
சுரேன் செல்வநாயகம்

Contact: 647.308.3090 / E-Mail: surren12@gmail.com

நேர்மையுடனும்,விசுவாசத்துடனும் உங்களுக்காக வீடுகள்,வியாபார நிலையங்கள் வாங்கவும்,விற்கவும் உங்கள் கனவுகளை நனவாக்கும் ஒரு நம்பிக்கையான முகவர்

PYRAMID GROUP REAL ESTATE PROFESSIONALS
NERANJAN & SUGAN TEAM
PYRAMID GROUP YOUR DREAM TEAM

NERANJAN RASIAH
SALES REPRESENTATIVE
416-804-4436



TOP LISTING TEAM IN GTA !!!
LIST WITH US & SEE THE DIFFERENCE
$$$ Get Paid for Referals $$$

Free Real Estate Class - Call: 416.321.6969

RealEstate / Commercial Investments



MAJOR MACKENZIE & HWY 27
Bedroom : 4
Washroom: 3
Price : $799,990



PARKLAWN & MANITOBA
Bedroom : 1
Washroom: 1
Price : $259,900



WESTNEY & ROSSLAND
Bedroom : 3
Washroom: 3
Price : $399,900



MARKHAM & ELSON
Bedroom : 4 + 1
Washroom: 4
Price : $ 679,900



QUEEN & RIVER ST
Bedroom : 3
Washroom: 3
Price : $ 699,900



SIMCOE & TAUNTON
HOUSE FOR LEASE
Bedroom : 4
Washroom: 3
Price : $ 1900



RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage

A. Anton Jeeva B.Eng

Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage can be arranged from 2.4%
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055

Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9


SECOND MORTGAGES
Residential Private Mortgages
24 மணி நேரத்தில் உடனடி அப்ரூவல்.
Good Credit or Bad Credit No Problem
Upto $200,000


647.537.2972



அகத்தின் அழகு முகப்பில் தெரியும்....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough